# படி

# PAHDI

படித்தேன்! படித்தேன்!! படித்தேன் சுரந்தது

படித்தல் 1 படிதல் 7



யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரியின்
1வது பீடாதிபதி
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

## சிறப்பு மலர்

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
கற்றல் கற்பித்தல் தர
உள்ளீட்டு மையத்தின்
உலக ஆசிரியர் தின வெளியீடு

**WORLD TEACHERS DAY**
**CENTER FOR TEACHING - LEARNING**
**QUALITY INPUTS PUBLICATION**

**JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION**

**- 2006 -**

# கல்லூரி கீதம்

**இராகம்:** பிருந்தாவன சாரங்கா
**தாளம்:** ஆதி

**பல்லவி**

வாழ்க யாழ் கல்வியியற் கல்லூரி - என்றும்
சூழ்க நல் ஆசிரியர் கலைக் கல்வி பல்லூழி

**அனுபல்லவி**

அழ்கடைலனக் கல்வி அறிவு தரும் அன்னை
ஏழிசை பாடியே என்றும் துதிப்போம் - நாமே

**சரணம்**

தெய்வபக்தி தேசபக்தி தெய்வீகக் குருபக்தி
உய்யும் வழி காட்டியே உணர்ந்து வணங்கிடுவோம்
செய்வதெல்லாம் செம்மையுறச் செய்திடவே கற்றிடுவோம்
வையகத்தில் ஆசிரிய வளக் கல்வி நல்கும் அன்னை

(வாழ்க)

உளவியல் கல்வியியல் உயர்ந்த கற்பித்தல் முறை
வள நிறை விஞ்ஞானம் வரை சித்திரம் கணிதம்
அளவிலா நயம் நிறை ஆடலும் பாடலும்
விளையாடல் ஆரம்ப விதிக் கல்வி தரும் அன்னை

(வாழ்க)

பாங்கான கணனியும் பாலிக்கும் நூலகவியல்
ஆங்கிலம் தொழிற் கல்வி அழகுறத் தரும் அன்னை
நீங்காத பாசத்துடன் நிறைகல்வி நல்கும் மாதா
நாம் காணும் கலைத் தேவி நானிலத்தில் பல்லாண்டு

(வாழ்க)

எழுத்தறிவித்தவன் இறையவன் ஆவான்
பழுத்த செந்தமிழின் பழச்சுவை ஊட்டுவான்
செழித்திடும் ஆசிரியச் சீர்கல்வி தருவான்
வழுத்தியே வாழ்த்துவோம் வளமார் கல்லூரி அன்னை

(வாழ்க)

தாமரை நாயகன் உதித்தே எழுந்தான்
தண்கலை கல்வியின் றாமரை விரித்தான்
நாமகள் வந்துறையும் கோவிலும் சமைத்தான்
நலம்பெறக் கல்வியிற் கல்லூரி வளர்த்தான்

(வாழ்க)

ஆக்கம்:
"கலாரத்னா" கலாபூஷணம் "மஹா வித்துவான்"
யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் எம்.ஏ.ஜே.பி.

# படி

# PAHDI

படித்தேன்!  படித்தேன்!!  படித்தேன் சுரந்தது

படித்தல் 1  படிதல் 7

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரியின்
1ஆவது பீடாதிபதி
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

# சிறப்பு மலர்




யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
கற்றல் கற்பித்தல் தர
உள்ளீட்டு மையத்தின்
உலக ஆசிரியர் தின வெளியீடு

## WORLD TEACHERS DAY

**CENTER FOR TEACHING - LEARNING
QUALITY INPUTS PUBLICATION**


**JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION**

**- 2006 -**

# "படி"யின் உள்ளே

பக்கம்


- 'படி' சிகரத்தை நோக்கிய தரிசனம் திரு. தம்பிராசா சிவகுமார் இதழாசிரியர் - விரிவுரையாளர். 01
- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. S. K. யோகநாதன் அவர்களின் பகிர்வு. 03
- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி திரு. S. R. சத்தியேந்திரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துரை ஆசிரியர் வாண்மை விருத்திக்கு உதவும் 'படி'. 04
- வினைத்திறன்மிக்க கற்பித்தலுக்கான பிரவேசங்கள் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் முதலாவது பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. 05
- அபிவிருத்தி நோக்கிய ஆசிரிய வாண்மைப் பிரயோகங்கள் திரு. S. K. யோகநாதன் பீடாதிபதி. 13
- காலத்தை வென்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 1வது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் - பா. தனபாலன் - உப பீடாதிபதி கல்வியும் தர மேம்பாடும். 18
- கல்வியை இற்றைப்படுத்துகையும் சர்வதேச பிரவேசங்களும் பாலசுப்பிரமணியம் தனபாலன் Ba(Cey), PGDE (merit), Dip in Psy 1st class Dip in Guidance counceling, M.Phil in Ed 22
- கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களது அர்ப்பணிப்பில் உருவாகியதே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தம்பிராசா சிவகுமார் விரிவுரையாளர். 27
- பாடசாலைக் கல்வித்தர மேம்பாட்டிற்கான தலைமைத்துவ தகைமைத்திறன் விருத்திக்கான வாய்ப்புக்கள் - க. பாஸ்கரன் B.sc, Dip in Ed, M.sc உபீடாதிபதி தொடருறு ஆசிரியர் கல்வி. 34
- **MAJOR APPROACHES IN GUIDANCE AND COUNSELLING** T. *Mohan, Lecturer-English,* 46
- இலங்கையில் முகமூடிக் கைத்தொழில் திருமதி M.E.B மரியதாசன் கல்வியியலாளர். 53
- நகரமயமாக்கலும் அதன் விளைவுகளும் திருமதி ஜெ. உதயகுமார் B.A, Dip - in - Ed (merit) MA in culturel. 58
- 'உங்கையிற்பிள்ளை உனக்கே' எழுத்துரு - நாடகம் க. இ. கமலநாதன், விரிவுரையாளர். 69
- விஞ்ஞான வகுப்பறைகளில் பல் உள ஆற்றல் கோட்பாட்டின் பிரயோகம் திரு. சி. திவாகரன் கல்வியியலாளர். 85
- மூளைவாதமும் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளும்திரு.த.சிவகுமார்விரிவுரையாளர். 90



# "படி" சிகரத்தை நோக்கிய தரிசனம்

திரு. தம்பிராசா சிவகுமார்
இதழாசிரியர் - விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உலகளாவிய ரீதியில் ஆசிரியவாண்மை துரித கதியில் வளர்ச்சியடைந்து வருகின்றது. அதற்கு ஈடுகொடுக்கும் வகையிலான ஆக்கங்களோ வெளியீடுகளோ எமது பிரதேசத்தில் போதுமானதாக இல்லை. இதைப் போக்கும் நோக்கில் "படி" இதழ் ஆசிரிய தினத்தன்று வெளிவருகின்றது. இதனூடாக ஆசிரியர்கள் தமது கல்வியறிவினைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியப் பணியை இருளை அகற்றும் விளக்கொளிக்கு ஒப்பிடுவர். விளக்கின் ஒளி இருளை அகற்ற வேண்டுமாயின் அவ்விளக்கினைத் தொடர்ந்து சுடர்விட்டு எரியச் செய்தல் வேண்டும். அதற்கும் அச்சுடரினை வளர்க்கும் நெய் தொடர்ச்சியாக ஊற்றப்படுதல் வேண்டும். அதே போன்று மாணவரிடையே அறியாமை என்னும் இருளை அகற்றுதவற்கு ஆசிரியன் என்னும் விளக்கிற்கு அறிவு என்னும் நெய் தொடர்ந்து ஊற்றப்படவேண்டும். இதற்கு "படி" வழிகாட்டி நிற்கின்றது.


மேலும் ஆசிரியர்களைப் புதிய வார்ப்புக்களாய் உருவாக்கும் எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியைப் பல்வேறு சவால்கள், சிரமங்களுக்கு முகம் கொடுத்து எமது மண்ணில் நிறுவிய முதலாவது பீடாதிபதி ஓய்வு பெற்ற கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் சிறப்பு மலராக இவ்வாண்டு "படி" இதழ் வெளிவருகின்றது. கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களுடைய ஆளுமையின் பல்வேறு அம்சங்களைத் தனித்தும், இணைத்தும் நோக்கி அவற்றினூடு புலப்படும் அவ் ஆளுமைச் சிறப்புக்களை மேலும் ஆய்வு செய்து வெளியீடுகளை மேற்கொள்ள இப் "படி" இதழ் அடி எடுத்துக் கொடுக்கின்றது.

இவ் 7வது "படி" இதழை வெளிக்கொண்டு வர பல தடைகளும், சமூக யுத்த சூழ்நிலைகளும் ஏற்பட்டன. ஆனாலும் நான் இம்மலரை வெளிக்கொண்டுவர அயராது பாடுபட்டேன். மேலும் கல்லூரியின் பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்கள் "படி" இதழ் உயிர்ப்புப் பெறுவதற்காக ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி நெறிப்படுத்தினார் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.

"படி" இதழிற்கு வாழ்த்துரை வழங்கிய உபபீடாதிபதி S.R. சத்தியேந்திரம்பிள்ளை அவர்களுக்கும், "படி" வெளிவருவதற்கு பல்வேறு வழிகாட்டல்களை அவ்வப்போது வழங்கிய உபபீடாதிபதி பா. தனபாலன் அவர்களுக்கும், இந்நூல் வளர்ந்து செல்வதற்கு ஆக்கங்களைத் தந்துதவிய கல்வியியலாளர்களுக்கும், மற்றும் உபபீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மற்றும் இவ்விதழ் சிறப்புற அச்சிட்டுத் தந்த குரு பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றிகள்.

திரு. தம்பிராசா சிவகுமார்
இதழாசிரியர் - விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

06-10-2006





**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி**
**திரு. S. K. யோகநாதன் அவர்களின்**

# பகிர்வு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000ம் ஆண்டு ஆரம்பித்ததிலிருந்து தொடர்ச்சியாக "படி" ஆசிரிய வாண்மை இதழ் ஆசிரியர் தினத்தன்று வெளிவந்து கொண்டிருக்கின்றது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற முதுமொழி தமிழர் தம் பொது மொழி. எழுத்தறிவித்தல் என்பது கல்விக் கண்களைத் திறப்பவர்கள் ஆசிரியர்களே. அவர்களுடைய வாண்மை விருத்திக்காக வெளிவரும் "படி" இதழின் 7 வது இதழ் வெளிவருவதை இட்டு மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க்கையின் பயனை ஒவ்வொரு மனிதனும் பூரணமாக அடைவதற்கும், தான் வாழும் சமுதாயத்தினதும் அதனூடாக உலகத்தினதும் செம்மையான வளர்ச்சிக்காக உளப்பூர்வமாகவும், ஒழுங்காகவும் உழைப்பதற்கும் கல்வி இன்றியமையாதது.

தனி மனித வளர்ச்சி, சமுதாய எழுச்சி, பொருளாதார உயர்ச்சி, ஆன்மீக, பண்பாட்டு மறுமலர்ச்சி முதலியவை கல்வியின் சீரிய இலட்சியங்கள்.

கல்வி என்பது, மனிதனுள்ளே அரும்பு நிலையிலுள்ள நல்லாற்றலைத் தூண்டி விழிப்படையச் செய்யும் செயற்பாடாகும். இச் செயற்பாட்டின் பிரதான செயலாளன், இயக்குநர் – ஆசிரியரே.

மனிதனைப் புனிதனாக்கி பூரணமானவனாக ஆக்கும் மகத்தான பணிக்குத் தன்னை அர்ப்பணித்துள்ள ஆசிரியனுக்கு வழிகாட்டும், அவனது வாண்மையை விருத்தியாக்கும் கருவியாகப் "படி" இதழ் வெளிவருகின்றது. இதன் இதழாசிரியர் திரு. T. சிவகுமார் மற்றும் வெளிவர உதவியோர் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. S. K. யோகநாதன்
பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

06-10-2006

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி
திரு. S. R. சத்தியேந்திரம்பிள்ளை அவர்களின்



# வாழ்த்துரை

## ஆசிரியர் வாண்மை விருத்திக்கு உதவும் "படி"

உலக ஆசிரியர் தினத்தைப் பிரதிபலிக்கும் வகையில் "படி" சஞ்சிகை தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படுகின்றது.

துறைசார் அறிஞர்களின் படைப்புக் களை கல்விச் சமூகத்திற்கு எடுத்துச் செல்லும் அளப்பரிய பணியை "படி" ஆற்றி வருகின்றது.

கல்வியியல், உளவியல், முகாமையியல் வழிகாட்டலும் ஆலோசனையும் ஆகிய முக்கிய கல்வித்துறைகள் உட்பட ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்தோருக்குப் பயனளிக்கக்கூடிய தரமான பல ஆக்கங்களை "படி" உள்ளடக்கியிருக்கின்றது.

போர்க்காலச் சூழலில் பல்வேறு இடர்கள் மத்தியிலும் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திக்கு உதவும் உன்னதப் பணியில் படியின் ஆசிரியர் ஈடுபட்டிருக்கின்றார்.

ஆற்றல் மிக்க இளம் கல்வியியலாளர் திரு. த. சிவகுமார் அவர்கள் இக் கல்லூரியில் ஏற்கனவே பாராட்டத்தக்க பல ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். கல்விச் சமூகத்திற்கு மிகுந்த பயனளிக்கக்கூடிய வகையில் அவரால் மேற்கொள்ளப்படும் "படி" சஞ்சிகை வெளியீடு அமைகின்றது. அவருக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை**
உப பீடாதிபதி (நிர்வாகம்/நிதி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



# வினைத்திறன்மிக்க கற்பித்தலுக்கான பிரவேசங்கள்

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
முதலாவது பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

வினைத்திறன் மிக்க கற்பித்தல் என்று கூறும் போது அது மிகவும் சிக்கலானதும் பரந்துபட்டதுமான எண்ணக்கருவினை கொண்டிருக்கின்றது.

கற்பித்தல் என்பது ஒருகலை பல்வேறுவிதமான உத்திகளை அது தன்னகத்தே கொண்டுள்ளது. வகுப்பறை ஒன்றில் ஆசிரியரின் நடதடதைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. கற்பித்தல் முகாமைத்துவம் கற்பித்தல் முறையியல், கற்பித்தல் விளைவுகள் என்ற பல அம்சங்களையும் வினைத்திறன் மிக்க கற்பித்தல் தன்னுள் அடக்கியுள்ளது. வினைத்திறன் மிக்க கற்பித்தல் உயர்வுற இரண்டு பிரதான அடிப்படை அம்சங்கள் மிக அவசியமானவை.

1. கற்பித்தலுடனான விருப்பு. Willingness in Teaching
2. கற்பித்தலுடனான ஈடுபாடு. Involvement in Teaching

இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பும் கொண்டவை.

ஒருவிடயத்திலே ஒருவருக்கு விருப்பு காணப்படுமாயின் அவர் அதில் ஈடுபாடு கொள்வதும், அவ் விடயத்திலே அவர் முழுமையாக ஈடுபடும் போது அதில் விருப்பு ஏற்படுவதும் இயல்பு அதில் ஒன்று இல்லாது விட்டால் மற்றையதும் இல்லாது போகலாம்.

கற்பித்தலிலும் இதனைப் பொருத்திப் கொள்ளலாம் மேற்கூறிய இரண்டும் ஒரு ஆசிரியரின் செயலொலுங்கில் முழுமையாக உள்வாங்கப்படும் போது அவரது கற்பித்தல் மேம்பாடடைய வாய்ப்புண்டாகின்றது. அது வினைத்திறன் மிக்க கற்பித்தலுக்கு வழியமைப்பதாக அமைகின்றது. அதன் வழி மாணவர்களது சாதனை மட்டம் உயர்வடைய வாய்ப்பேற்படுகின்றது.

## சாதனைமட்டம் உயர்தல்

மாணவர்களது சாதனைமட்டத்தை உயர்த்துவதே ஆசிரியர்களின் கடைமைக்கூற்றில் முதன்மையானது என்பது தற்காலக் கல்விச் செயல்நெறியின் முக்கி இயல்பாகும் அதற்கான ஆசிரியர் பின்வரும் கடமைக் கூறுகளை ஆற்றவேண்டியவராகவுள்ளார்.

1. கல்வி சார் இலக்குகளுக்கு அழுத்தம் கொடுத்தல்
2. கலைத்திட்டம் தொடர்பான பூரண அறிவை தான் கொண்டிருப்பதுடன் மாணவர்களுக்கும் வழங்கல்.
3. கலைத்திட்டத்தை அவதானமாக ஒழுங்கமைத்துக் கொள்வதுடன் பாகுபடுத்திக் கொள்ளல்.
4. மாணவர் கற்கவேண்டிய விடயங்களைத் தெளிவாக விளக்கல்.
5. மாணவர்கள் கற்ற விடயம் தொடர்பாக பயிற்சியினைப் பெறுவதற்கு அதிக சந்தர்ப்பங்களை வழங்கல்.
6. மாணவர்களது வெற்றியை உறுதிசெய்யக்கூடிய ஊக்குவிப்புக்களையும், பின்னூட்டல்களையும் வழங்கல்.
7. மாணவர்கள் ஆற்றிய கடமைகளில் ஒழுங்கான மீளாய்வுகளை மேற்கொள்ளல்.
8. மாணவர்கள் ஆற்றிய கடமைகளுக்கு வகைசொல்லும் ஆற்றலை வளர்த்தல்.
9. ஆசிரியர் தான் ஆற்றிய பணிகளில் மீளாய்வு செய்து கொள்ளல்.

மேற்கூறியவை ஆசிரியர்களால் ஈடுபாட்டுடன் கற்பித்தலில் ஈடுபடுத்தப்படும்போது மாணவர்கள் சாதனைமட்டம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## வினைத்திறனும் நேரடிக்கற்பித்தலும்

மேலும் வினைத்திறன் மிக்க கற்பித்தல் மாணவனின் சாதனைமட்ட உயர்வுக்கு நேரடிக் கற்பித்தல் (Direct Instruction) என்ற உத்திக்கு கூடியளவு அழுத்தம் கொடுக்கின்றது. இது தெளிவான படிமுறைரீதியான கற்பித்தலாக (Stepwise instruction) வலியுறுத்தப்படுவதுடன் மாணவரின் அறிவுசார் கற்றல் விருத்தியினை வலியுறுத்தி நிற்கின்றது.

படிமுறைக் கற்பித்தல் என்பது வினைத்திறன் மிக்க கற்பித்தல் செயல் ஒழுங்கில் சிறப்பிடம் பெறும் இன்னோர் அம்சமாகும். கற்பிக்கப்படும் விடயங்கள் சிறு அலகுகலாக்கப்பட்டு கற்பிக்கப்படுவது இங்கு முக்கியம் பெறுவதுடன் அவற்றிற்கிடையே காணப்படவேண்டிய இணைப்பு அல்லது தொடர்பு மிக அவசியமானதொன்றாக பேணப்படுவதால் மாணவர்களுக்கு கற்பிக்கும் விடயங்கள் தெளிவாகச் சென்றடைய வாய்ப்பேற்படுகின்றது. ஸ்கின்னர் விளக்கிய நிரலித்த கற்பித்தல் முறையானது இங்கு முக்கியம் பெறுவதைக் கவனத்தில் கொள்ள முடிகின்றது. இவ்வகையான அனுகுமுறைமூலம் மாணவர் கூடுதலாக சாதிக்க முடியும் என்று ஆலோசனை கூறப்படுகின்றது.

## வினைத்திறனும் முறையியலும்

இவ்வாறு கூறுகின்றபோது நாம் முக்கியமாக ஒரு விடயத்தை கருத்தில் கொள்ள வேண்டும் அதாவது வினைத்திறன் மிக்க கற்பித்தலில் "முறையியல்" (Methodology) முக்கியத்துவம் பெற்றுக்கொள்கின்றது. கற்பித்தல் மேன்மையுற அதற்காகக் பயன்படுத்தும் முறையியல் முக்கியமானதாகும்.

நாம் எதைக் கூறுகின்றோம் என்பதைவிட எப்படிக்கூறுகின்றோம். என்பதில்தான் அதன் தாக்கம் தங்கியுள்ளது. எப்படிக்கூறுகின்றோம் என்பதில் நாம் விடயத்தை கூறும் முறையியல் தங்கியுள்ளது. கற்பித்தலிலும் அவ்வாறே. எப்படிக் கற்பிக்கின்றோம். என்பதில்தான் கற்பித்தலில் வினைத்திறன் உறுதிசெய்யப்படும் என்பதை ஆழ்ந்து கவணத்தில் கொள்ளவேண்டும்.

"எந்த விடயத்தையும் எவருக்கும்
எத்தரத்திலும் அறிவியல் சார்ந்த
முறையில் கற்பிக்கலாம் என்பது
புரூணர் கருத்து"

அங்கே அறிவியல் சார்ந்த முறையொன்று கூறப்பட்டுள்ளதை அழுத்திக் கவணத்தில் கொள்ளல்வேண்டும் அங்கே தான் மாணவர்களுக்கு வழங்கப்படும் விடயங்களின் அளவு, விடயங்கள் வழங்கப்படும்போது கவணிக்கவேண்டிய இடைவெளி , விடயங்களை வளங்கும் முறை என்பன முக்கியம் பெறுகின்றன. இங்கு அளவு (quantity) என்பதில் கவனஞ்செலுத்தப்பட்டுத்தான் கலைத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. அவற்றைக் கற்பிக்கும் போது விடயங்கள் இடையே காணப்பட வேண்டிய இடைவெளி (Spacing) மற்றும் கற்பிக்கவுள்ள விடத்திற்காக பயன்படுத்தப்படவுள்ள முறையியல் ஆகியன ஆசிரியராலேயே தீர்மானிக்கப்பட வேண்டும் ஆசிரியர் தனது மாணவரின் தரம் (Standard) அவர்களது சூழல் (Environment) என்பவற்றை மனதிருத்தி மேற்படி இரண்டினையும் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட ஒரு பாடம் வேறுவேறான ஆசிரியர்களால் வேறுவேறான முறையியல்களைப் பயன்படுத்தி கற்பிக்கப்படலாம் அது அவ்வவ் ஆசிரியர்கள் கற்பித்தலில் கொண்ட ஈடுபடு தன்மை மற்றும் சூழல் மாணவர் தரம் போன்ற காரணிகளால் வேறுபடலாம். எவ்வாறெனினும் வினைத்திறன் மிக்க கற்பித்தலில் பயன் படுத்தப் படும் முறையியல் முக்கிய பங்கினை பெற்றுக் கொள்வதை மனதிருத்திக்

கொள்ளல் வேண்டும். கற்பிக்கப்படும் பாடம், கற்பவர் தரம், கற்றல் நடைபெறும் சூழல் என்பவற்றைக் கொண்டு முறையியலை ஆசிரியர் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். தொடர்ந்து ஒரே முறையியலை கற்பித்தலுக்குப் பயன்படுத்தக் கூடாது. அங்கு அடிக்கடி மாற்றம் தேவை சாதுரியமாக தேவையுடன் ஏற்படுத்தப்படும் முறையியல் மாற்றங்கள் வினைத்திறன் மிக்க கற்பித்தலுக்கு உரம் சேர்க்க வல்லவை.

கற்பித்தலின் போது கற்பிப்பவரின் தொனியின் ஏற்ற இறக்கமும் கற்பித்தலின் வினைத்திறனை அதிகரிக்கும் இன்னுமோர் காரணியாகும் தேவை கருதி கற்பித்தலின் போது தொனியில் கொடுக்கப்படுகின்ற ஏற்ற இறக்கங்கள் அல்லது அழுத்தங்கள் கற்பித்தலின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யக்கூடியவை.

## வினைத்திறனும் ஆசிரியர் இயல்புகளும்

வினைத்திறன் மிக்க கற்பித்தல் சிறப்புற ஆசிரியரின் செயற்றின் உயர்வுடன் காணப்பட வேண்டும். வினைத்திறன் மிக்க ஆசிரியரிடம் பின்வரும் இயல்புகள் காணப்படவேண்டுமென போற்றரும் புறோபி என்பவரும் 1988ல் கருத்துக் கூறினர்.

01. கற்பித்தல் இலக்குகள் (objectives) பற்றிய தெளிவான அறிவு உடையவராக விருத்தல்.
02. கற்பித்தலுக்கு தேவையான விடயப்பரப்பையும் (contents) திட்டங்களையும் (plans) தெளிவாகப் பெற்றிருத்தல்.
03. மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன? ஏன்? அளவு என்ன? என்ற விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடும் தெளிவு பெற்றிருத்தல்.
04. கற்பிக்கப்படும் பாடப்பரப்பை தெளிவுபடுத்தவும் வளப்படுத்தவும் தேவையான பயிற்சிகளை வழங்குதல்.
05. தேவையான கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் ஆற்றல்.

06. மாணவர் தேவை, நாட்டம் ஆகியவற்றை அறிதல்.

07. தனது அறிவைப் பயன்படுத்தி பொருத்தமற்ற விடயங்களைத் தெரிந்து விலக்கல்.

08. உயர்ந்த அறிவினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தினை மாணவர்களுக்கு வழங்கல்.

09. ஒழுங்கான, பொருத்தமான பின்னூட்டல் (Feed back) களை வழங்கல்.

10. ஏனைய பாடங்களுக்கிடையான ஒருங்கிணைப்பைப் (Integration) பேணிக் கற்பித்தல்.

## விளைத்திறனும் வகுப்பொழுங்கும்

மற்றும் வினைத்திறன் மிக்க கற்பித்தல் என்று சிந்திக்கும்போது வகுப்பறைக் கட்டுப்பாடு அல்லது ஒழுங்கு (Class Discipline) என்ற விடயமும் முக்கியபங்கினை வகிக்கின்றது. வகுப்பறையில் மாணவர்கள் ஒழுங்கினைப் பேணிக் கற்பிக்கும்போது கற்பித்தல் பயன்பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. வகுப்பறையொழுங்கு, பாடத்திட்டவொழுங்கு, பாடக்குறிப்பு எழுதுவதில் ஒழுங்கு என்பன சிறப்பாக அமையுமேயானால் வினைத்திறன்மிக்க கற்பித்தல் மேம்பாடடைய காரணிகளாகின்றன.

## விளைத்திறனும் முழுமைக்கற்றலும்

மற்றும் இவையாவும் வினைத்திறன் மிக்க கற்பித்தலில் பங்கு கொள்வதுடன் இன்னுமோர் முக்கிய காரணியும் இவ்வகைத் கற்பித்தலில் சிறப்பிடம் பெற்றுக்கொள்கின்றன. என ஆய்வுகள் கூறுகின்றன.

அது முழுமையான கற்பித்தல் என்பதாகும். கற்பிக்கப்படுகின்ற பாடம் தொடர்பான முழுமையான காட்சி அல்லது அறிவு மாணவர்களுக்குச் கிடைக்கச் செய்தல் வினைத்திறன் மிக்க கற்பித்தலுக்குப் பெரிதும் உதவுகின்றது. பகுதிகள் மூலம் முழுமைக்கோ அல்லது முழுமையிலிருந்து பகுதிகளுக்கோ மாணவர்களை அழைத்துச் சென்று கற்பிக்கப்படும் விடயம்

தொடர்பான முழுமையான அறிவை அவர்கள் பெறும் வண்ணம் கருமமாற்றல் வேண்டும். இவ்வாறு முழுமையாக பெறப்படுகின்ற விடய அறிவு வினைத்திறனுடையதாவதற்கு அங்கு பெறப்படுகின்ற முழுமையறிவு பிரச்சினைகள் தீர்ப்பதற்கு சிறப்புக் காரணியாக அமைதல் நிதர்சனமானது. இதனையே ஹெஸ்ரோல் (Gestalt) உளவியலாளரும் தமத கற்றல் கொள்கையில் விளக்கியுள்ளனர். எனவே கற்பிக்கப்படும் விடயத்தின் முழுமையை மாணவர்களிடத்து ஏற்படுத்துவதன் மூலம் ஆசிரியர் தனது கற்பித்தலை வினைத்திறனாக்கிக் கொள்ள முடியும். கற்பித்தலில் வேண்டப்படும் அளவு, இடைவெளியெல்லாம் இங்கு முரண்படாதவாறு ஆசிரியர் கவனங் கொள்ளல் வேண்டும்.

## வினைத்திறனும் ஊக்கமும்

வினைத்திறன் மிக்க கற்பித்தலுக்கு அவசியமான மாறறோர் அம்சம் மாணவர்களை ஊக்குவிக்கும் பண்பாகும். ஆசிரியர் மாணவர்களின் தேவை நாட்டம் என்பவற்றை அறிந்து அவற்றில் அவர்கள் நிறைவு காணும் வகையில் கற்பித்தலை ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். மாணவர்கள் இயல்பாகவே புதியவற்றை அறிய வேண்டும், புதியவற்றை படைக்க வேண்டும் என்பதில் ஆர்வமுள்ளவர்கள். அவ்வார்வத்தை கருவியாகக் கொண்டு கற்பித்தலுக்கு ஏற்பாடு செய்து கொள்ளும்போது கற்றல் இலகுவாகி கற்பித்தல் வினைத்திறனுடையதாக அமைந்து பயன் தரவல்லதாக அமையும். எனவே மாணவரை அறிந்து அவர்களை ஊக்குவிக்கும் ஆசிரியர் வெற்றி பெற்ற ஆசிரியராக அமைவர் என்பது உறுதி.

ஆசிரியரது உற்சாகமான செயற்படுதன்மை, முன்மாதிரியான நடத்தை இயல்புகள் மாணவர்களுக்கு ஊக்கலாக அமைந்து கற்பித்தலில் இலகு தன்மையை ஏற்படுத்துவதுண்டு. மேற்கூறிய இயல்புகளுடன் கூடிய ஆசிரியர் மாணவர்களது மனதைக் கவர்ந்த வீரபுருக்ஷர்களாகின்றனர். அந்த இயல்பு வெற்றிகரமான கற்பித்தலுக்கு வழி செய்து அது வினைத்திறனுடைய கற்பித்தலுக்குக் காரணமாக அமைகின்றது.

# வினைத்திறன்மிக்க கற்பித்தல் அளவீடு

இறுதியாக ஆசிரியரொருவர் தனது கற்பித்தலின் விளைவுகளை மதிப்பிட்டுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் தமது கற்பித்தலில் வினைபகுதிதிறனை (Effectiveness) அறிந்து கொள்ள முடியும். கற்பித்த பின்னர் நடாத்தப்படுகின்ற மதிப்பீடுகள், பின்னூட்டல் செயற்பாடுகள் மூலம் இந்த அளவீட்டினை அறிந்து கொள்ளலாம். ஆசிரியரின் வகுப்பறைச் செயற்பாட்டின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளீடு (Input) அவர்களிடமிருந்து எவ்வளவில் வெளியிடப்படுகின்றது (Output) என்பதை மதிப்பீடுகள், பின்னூட்டல்கள் அல்லது கணிப்பீடுகள் மூலம் அறிந்து கொள்வதன் மூலம் தமது கற்பித்தலின் வினைபடுதிறனை ஆசிரியர் அறிந்து கொள்ளவேண்டும். அந்த அளவீடு (1:1) ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் இருக்குமேயானால் அவ்வாசிரியரின் கற்பித்தல் வினைத்திறன் மிக்கது என்று கொள்ள முடியும். உள்ளீட்டைவிட வெளியீடு குறைவாக இருக்குமேயானால் ஆசிரியர் தனது கற்பித்தல் ஒழுங்கில் கற்பித்தல் முறையில் பொருத்தமான மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும்.



# அபிவிருத்தி நோக்கிய ஆசிரிய வாண்மைப் பிரயோகங்கள்

திரு. S. K. யோகநாதன் பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இன்றைய அபிவிருத்திக்கான மாற்றத்தின் மையம் பாடசாலைகளாகவும், முதன்மை வாண்மையாளராகவும் ஆசிரியர்களுமே நோக்கப்படுகின்றார்கள். பாடசாலையின் சகல செயன்முறைகளின் உயிர்த் துடிப்புக்களுக்கும், ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளும், அர்ப்பணிப்புக்களும், தியாகக் கடப்பாடுகளும் காரணமாகவுள்ளன. ஆசிரியர்கள் தம்மை வாண்மையாளர்களாக உயர்த்திக் கொள்ளும் பொழுது, பாடசாலையும் – சமூகமும் – நாடும் உயர்கின்றது. இவ் வகையில் உயர் தொழில் வாண்மையுள்ள ஒரு ஆசிரியர் தேச நிர்மாணி (Nation Builder) என்ற தகைமையைப் பெறுகின்றார். எல்லா ஆசிரியர்களும் உயர் தொழில் வாண்மையாளர்களாக மாற புதிய கற்கைப் பிரயோகங்களையும், செயலாற்றுகைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இன்றைய உலகளாவிய ரீதியில் கற்பித்தல் கலையானது ஒரு வாண்மைத் தொழிலாகப் பரிணமித்துள்ளது. எம் நாட்டில் வைத்தியர், கணக்காளர், பொறியியலாளர், சட்டத்தரணிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் வாண்மைத் தொழில்களாகக் கொள்ளப்படுகின்றன. ஆசிரியத் தொழில் இன்னும் முழுமையாக இந்நிலையைப் பெறவில்லை.

## வாண்மைத் தொழிலின் பண்புகள்

I. பொது மக்களுக்குச் சேவையாற்றல் தொடர்பான உணர்வைக் கொண்டிருத்தல். தொழில் சார்ந்த அர்ப்பணிப்பு வாழ்நாள் முழுவதும் நீடித்திருத்தல்.

II. நீண்ட கால முன் சேவை சிறப்புப் பயிற்சி பெற்றிருத்தல். அதனூடாக அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் மூலமாக வாண்மைத் தொழிலில் பிரவேசிக்க தகைமை பெறல்.

III. தொழில் அர்ப்பணிப்பின் மூலம் பணிகளில் ஈடுபடும் போது சிறப்பான மேற்பார்வைக் குள்ளாக்கப்படுதலில் இருந்து சுயாதீனம் பெறல்.

IV. ஒழுக்கக் கோவை ஒன்றிற்கு உட்பட்டிருத்தல். தம் பணிகள் தொடர்பாகப் பொறுப்புக்கூறல்.

V. தம் தொழிலில் நவீன தொழில் நுட்பத்தைப் பிரயோகித்தலும் பயிற்சி பெறலும்.

VI. வாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களால் ஆன சுய கட்டுப்பாடுடைய அமைப்பில் அங்கத்தவராக இருத்தல்.

மேற்குறிப்பிட்ட இயல்புகளுடன் வாண்மைத் தொழிலில் தாம் ஆற்றும் பணிகள் தொடர்பான சிக்கல் நிலைமைகள், நிச்சயமற்ற நிலைமைகளைத் தீர்த்துக்கொள்ளும் ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும். பொருளாதார ரீதியான உறுதிப்பாடும் வாண்மைத் தொழில்களில் உறுதி செய்யப்படுகின்றன. இவ்வாறான தொழில் வாண்மையானது.

- ★ விசேட அறிவையும் நுட்பங்களின் தொகுதிகளையும் கொண்டிருத்தல். (The main Specilied and Professionalism)

- ★ முறைசார் அனுபவமும், பயிற்சியும் பெற்றிருத்தல் (Fomal Jraining and Experlence)

- ★ நடத்தை வழிகாட்டலுக்கான அறநெறிக்கோவை ஒன்றைப் பின்பற்றல் (An Ethical Code of Guidance of Conduct)

- ★ நிதிசார் வெகுமதிகளைக் கருதாது சேவைக் கடப்பாடுடையவராக இருத்தல் (A Commitment to service Rather Tham Monetary Awads)

இவ்வாறான வாண்மைத்துவ இயல்புகளை ஆசிரியர்கள் தமதாக்கிக் கொள்ள வேண்டும். மேலும் தமது தொழில், திறன்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும். ஆற்றல், தொடராகக் கற்கும் திறன் என்பவற்றையும் ஆசிரியர்கள் பெறுகின்ற போது அவர் வாண்மையாளராகின்றார். இவ்வாறானவர்கள் மாணவர் விரும்பும் ஆசிரியர்களாகவுள்ளனர். மாணவர்கள் ஆசிரியர்கள் பற்றிக் கொண்டுள்ள

மனப்பாங்குகளை அடிப்படையாகக் கொண்டே வகுப்பறைக் கருமங்கள் உயிர்த்துடிப்பாக நடைபெறுகின்றன. மாணவர்கள், ஆசிரியர்கள் பால் மிகுந்த கௌரவத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் வினைத்திறன் பொருந்தியதாக அமைவதைப பல ஆய்வுகள் சுட்டுகின்றன. (Nitsaisook and Anderson - 1998) இவ்வாறான ஆசிரியர்களது சேவைகளைப் பெறும் மாணவர்கள் மற்றும் சமூகம் உட்பட வெளிவாரியான அவதானிப்பாளர்களின் நம்பிக்கை – வரவேற்பு – விருப்பு – அவா என்பவற்றை ஆசிரியர்கள் சுவீகரித்துக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டே வாண்மையுள்ள நல்லாசிரியர் அங்கீகரிக்கப்படுகின்றார்.

## வாண்மையுள்ள நல்லாசிரியரின் பண்புகள்

- ☆ மாணவர்களின் நெருங்கிய ஆலோசகராக, வழிகாட்டியாக கற்பிப்பதில் – கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துபவராகக் கருமமாற்றுவார். மாணவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவார்.
- ☆ கற்பித்தல் நடவடிக்கைக்காக நித்தம் ஆயத்தத்தோடும், ஆர்வத்தோடும் வகுப்பறைக்கு வருகை தருவார்.
- ☆ மாணவர்கள் அபிவிருத்திக்கான அவரது அர்ப்பணிப்பு, தியாகம், கடப்பாடு உயரிய மட்டத்தில் இருக்கும்.
- ☆ பாடசாலையின் ஆசிரியர் குழாத்துடனும், அதிபருடனும், அதிகாரிகளுடனும் ஒத்துழைப்புடன் பரஸ்பர நம்பிக்கையுடன் பணிபுரிவார்.
- ☆ தம் தொழில்சார் கல்வித்திறன்களை மேம்படுத்தியபடி இருப்பார். நித்தம் புதியவற்றைத் தேடிய வண்ணம் அவற்றிக்கு ஏற்ப மாற்றம் – அபிவிருத்தி அடையக் கூடியதற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்டிருப்பார்.
- ☆ மாணவர்களுக்கும் – சக ஆசிரியர் – பெற்றோர் – அதிபர் சமூகத்தவர்களுக்கும் உதவுகையில் களைப்படைய மாட்டார்கள் பாடங்களுக்குப் புறம்பான இணைபாடவிதானச் செயற்பாடுகளில் முன்னணியில் நின்று செயற்படுவார்.

இவ்வாறான பண்புகளைக் கொண்ட நல்லாசிரியர் இன்று கல்வி அபிவிருத்தி, மாணவர்களின் விருத்தி நோக்கி பின்வரும் பாத்திர நடிபங்குகளையும் கொண்டிருக்க வேண்டும். தீர்மானம் மேற்கொள்பவர், சமூகத்தலைவர் கலைஞர், சிறப்பறிஞர், புதுமை படைப்பவர், சமூக மாற்ற முகவர், ஆலோசனை வழிகாட்டி, செப்பனிடுபவர், நீதிபதி, புலனாய்வாளர், அரசாங்க ஊழியர், வயது வந்தவர், துன்பத்தில் உதவுபவர், நண்பர், அர்ப்பண சேவையாளர், இவ்வாறான பல்பரிமாணப் பாத்திரப் படைப்புக்களுக்கு ஏற்ப ஆசிரியர் செயற்படும் போது அபிவிருத்தி நோக்கிய ஆசிரிய வாண்மையைப் பிரயோகிப்பவர்களாக ஆசிரியர்கள் திகழ்வர். மேற்குறிப்பிட்ட எல்லாப் பண்புகளுக்கும் மேலாக ஆசிரியர் அர்ப்பணிப்பாளராகத் திகழ வேண்டியது மிக முக்கியமானதாகும்.

## அர்ப்பணிப்பு DEDICATION)

ஆசிரியர் கற்பித்தலுக்காக அர்ப்பணித்தல் ஓர் அபிலாசையாக அபிவிருத்தி நோக்கிய ஆசிரிய வாண்மைப் பிரயோகமாக உள்ளது. மேலும் இவ் அர்ப்பணிப்பு சம்மதம் தெரிவிக்கும் வாக்குறுதியாக, கட்டாயமாகச் செய்ய வேண்டியதைச் செய்யும் கடப்பாடாக, வகை கூறலாகவும் (Accountability) உள்ளது. இதில் திடசங்கற்பம், பக்தி, வலுவான விருப்பு என்பன அடங்கும். இது முழு நிறைவான ஆசிரியராக இருப்பதற்கு ஆன்மீக ரீதியில் ஏற்படும் ஒரு தூண்டுதலாகவுமுள்ளது.

அர்ப்பணிப்பானது, ஆசிரியர் தன் ஆற்றலைப் பூரணமாகப் பிரயோகித்தலும், உறுதிப்பாடும் தியாக உணர்வும் கொண்ட தன்மையின் விளைவாகும். ஆசிரியர் தன் உச்ச இயலுமையைப் பிரயோகிக்க உடன்படுதல் அதனை ஆற்ற முடியாத நிலைகள் தோன்றும் போது அதனைக் கைவிடாத நிலையில் இருத்தலையும் அர்ப்பணிப்பு எடுத்துக் காட்டுகின்றது. ஆசிரியர் தம் பணியை தன் சக்திக்கு ஏற்ப செலுத்தக் கூடிய உச்ச அளவான முயற்சியைப் பிரயோகித்தலும் அர்ப்பணித்தலாகும். தான் அர்ப்பணிப்புடன் செயற்படும் விடயத்திற்கும் தனது சுய நன்மைக்குமிடையே முரண்பாடுகள் தோன்றும் போது அர்ப்பணம் செய்யப்பட்டதற்கே முன்னுரிமை கொடுப்பவரே அர்ப்பணிப்புள்ள ஆசிரியராகின்றார்.

உதாரணமாக ஆசிரியர் காலத்தை ஒதுக்குதல், உழைப்பையும் வளங்களையும் ஒதுக்குதல் போன்ற பிரச்சினைகளைக் கவனத்தில் எடுக்கும் போது மாணவருக்கே முன்னுரிமை வழங்குவார். இந்த அர்ப்பணமானது மாணவர்களுக்கே விசேட சேவை கிடைக்கக் கூடியவாறான செயல்களாக

அமையும். அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் எப்போதும் வழங்குவதற்குரிய ஏதும் ஒன்றை வைத்திருப்பார். மாணவர்கள் மீது எப்போதும் கரிசனை காட்டுவார். ஆசிரியர் ஒருவர் தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக உண்மையாகவே சொல்ல முடிவது தனது தியாகத்தின் மூலமேயாகும்.

தன்னுடன் கற்கும் மாணவர்கள் மற்றும் ஏனையோரிடத்தில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நோக்குடன் அர்ப்பணிப்பாகச் செயற்படும் ஆசிரியர் ஒருவரின் தொழில்சார் வாண்மைத்துவ வாழ்வில் மனத்திருப்தி ஏற்படும். இவ் உள நிறைவான அர்ப்பணிப்பானது, மாணவர் தொடர்பான அர்ப்பணிப்பு, சக ஆசிரியர் தொடர்பான அர்ப்பணிப்பு, பாடசாலை – சமூகம் தொடர்பான அர்ப்பணிப்பு, கற்றல் தொடர்பான அர்ப்பணிப்பு – தொழில் விருத்தி தொடர்பான அர்ப்பணிப்பு, பண்பான நடத்தை சார்ந்த அர்ப்பணிப்பு எனப் பல வகையாக உள்ளன. அர்ப்பணிப்பான ஆசிரியர் சேவை மூலம் இறையுணர்வைப் பெற முடியும். இவ்வகையில் தற்கால மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து தமது வாண்மையைப் புதிய நோக்கில் பிரயோகிப்பதன் மூலம் ஆசிரியர்கள் உயர்வு பெற முடியும்.




# காலத்தை வென்ற
# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
# 1வது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள்


- பா. தனபாலன் -

உப பீடாதிபதி

கல்வியும் தர மேம்பாடும்,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

சமகால மனிதவாழ்வின் கல்வி பல பரிமானங்களில் முதன்மைக் காரணியாகவுள்ளது. தனிமனிதர்களைப் பொறுத்த வரையிலும் அவர்களின் முன்னேற்றத்திற்குரிய நம்பகமான முதலீடாகவும் கல்வி உள்ளது. இக் கல்வி தொடர்பான உயர்ந்த பாரம்பரீயத்தை யாழ்ப்பாண மண் கொண்டுள்ளது. கல்விக்காகவே அம் மக்கள் தம்மை அர்ப்பணித்து வரலாறு உலகப் புகழ் பெற்றது. அந்த வகையில் கல்வியை வழங்கும் ஆசிரியர்களுக்கு உயர் மதிப்பை யாழ்ப்பாணத்தவர் வழங்கி வருகின்றனர்.

இலங்கையில் நவீன கல்விச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு தேசத்தைக் கட்டியெழுப்பும் ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சியை அளிக்க தேசிய கல்வியற் கல்லூரிகள் 1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அக்காலத்திலேயே யாழ்ப்பாணத்திலும் ஒரு தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் அரசியல் – நாட்டுச் சூழ் நிலைகள் காரணம் காட்டப்பட்டு தடைகள்

விதிக்கப்பட்டன. பதினைந்து வருடங்களுக்கு பின்னர் பதினைந்து தேசிய கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்ட பின் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களை முதற் பீடாதிபதியாக நியமித்து 2000 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

## தலைமைத்துவப்பண்பு நிறைந்த பீடாதிபதி

நேர்மை, ஆற்றல், புத்திசாதுரியம், செயன்முறைகளைச் சரியாகத் தெரிவு செய்தல், தேர்ந்தெடுத்த செயன் முறைகளை உரியவர்களைக் கொண்டு வெற்றிகரமாக்கும் ஆற்றல் என்பவை தற்கால தலைமைத்துவப் பண்புகளாக வரையறுக்கப்படுகின்றன. இப் பண்புகள் முழுநிறைவாகக் கொண்டவராக கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் செயலாற்றி: கல்லூரிக்கான கல்வியலாளர்கள், பதிவாளர், கல்வி சாரா ஊழியர்களைத் தெரிவு செய்து அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை கல்லூரிக்காகப் பெற்று, மிகக் குறுகிய காலத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உலக வங்கியின் 480 மில்லியன் ரூபா உதவியுடன் மிகப்பிரமாண்டமான சகல வசதிகளும் கொணட கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றது. இக் கல்லூரியைச் செதுக்கிய தலைமைச் சிற்பியாகத் திகழ்ந்த கமலநாதன் அவர்கள் கல்லூரியை இயக்கப்பட்டபாடுகள், சவால்கள், துயரங்கள், வேதனைகள் ஏராளம்.

இளம் சந்ததியினருக்கு மிகச் சிறந்த ஆசிரிய பயிற்சியை வழங்கி அவர்களினுடாகத் தமிழ் மண்ணில் கல்விப்பயிரை உயர்விப்பதற்காக பல்வேறு சவால்கள் மத்தியிலும் தனது அர்ப்பண சேவையை கல்லூரிக்கு வழங்கினார். கடுமையான சீரான நிர்வாகத்தை அவர் மேற் கொண்ட போது பலருடைய எதிர்ப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது ஆனாலும் அப்பலர் இறுதியில் உண்மையை உணர்ந்து உதவியளிக்க முன்வந்தனர். யாழ்ப்பாண மண் தனக்குச் சேவையாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்களை மறக்காத மண் என்பதை நிரூபிக்க கல்வியாளர்களுடன் இணைந்து இக் கல்லூரியின் இல்லங்களுக்கு தமிழ்ப்பற்றாளர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், தமிழ் இலக்கியப்பற்றாளர் பேராசிரியர் க. கைலாசபதி,

தமிழ் மண் பற்றாளர் பேராசிரியர் அ. துரைராஜா, தமிழ்க்கல்விப்பற்றாளர் கிழக்கு மாகாணத்தின் மைந்தன் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின் நினைவாகப் பெயர்களைச் சூட்டி பெருமை பெற்றார் கலாநிதி தி. கமலநாதன் அவர்கள்.

## கல்வித்தர மேம்பாட்டாளர்

தேசத்தைக் கட்டி எழுப்பவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், தொழில் வாய்ப்புக்களை கல்வியினூடாக ஏற்படுத்தி மனிதவள விருத்தியில் பயன்களை அதிகரிக்க கல்வியின் தர மேம்பாடு மிக முக்கிய காரணியாக உள்ளது. இந் நோக்கில் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் இலங்கையில் எந்தத் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் இல்லாத பத்துப் பாட நெறிகளைத் தற்துணிவுடன் ஆரம்பித்த முதன்மைப் பீடாதிபதியாகவும் கலாநிதி கமலநாதன் உள்ளார். ஆங்கில மொழி மூலம் ஆங்கிலம் நூலக விஞ்ஞானம், கணிதம், ஆகிய பாடநெறிகளும் தமிழ் மொழிமூலம் ஆரம்பக்கல்வி, விசேடகல்வி, நடனம், சங்கீதம், சித்திரம், நாடகம் ஆகிய துறைகளில் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதற்கு மிகத்தரமான கற்றல் வளங்கள், தர உள்ளிடுகள், ஆய்வுக்கூடங்கள், கணனிக் கூடங்கள், நூலகம், அரங்குகள், வகுப்பறைகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான தரமான உணவு, விடுதி வசதிகள் என சர்வதேச தரம் வாய்ந்த ஆசிரிய பயில்வை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி ஆற்றி வர பீடாதிபதி அவர்கள் கனடா, அமெரிக்கா, நோர்வே, பிரான்ஸ், ஜப்பான், இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் கல்விக் கருத்தரங்குகளில் பங்குபற்றியமை உதவியளித்தது.

மேலும் தனது நவீன கல்வியியற் சிந்தனைகளை நூல்களாக, ஆய்வுக்கட்டுரைகளாக வெளியிட்டு வருவதுடன் கல்வியலாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்களும் புதிய படைப்புக்களை, நூல்களை, ஆக்கங்களை எழுதவும் வழிகாட்டி வருபவர். தொடர்ந்து எல்லோரும் கற்க வேண்டும் என்பதற்கு தானே உதாரணமாக திகழ்ந்து வருபவர். இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரி வரலாற்றிலேயே முதலாவதாகக் கல்வியியற் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற

பீடாதிபதியாக விளங்கி தமிழினத்திற்கு பெருமை சேர்த்தவர். தொடர்ந்தும் தனக்கென கல்வியியலில் இலட்சிய பூர்வமான மாணவர் பரம்பரை ஒன்றையும் வளர்த்து வருகின்றமை அவரது உயர்ந்த சாதனையாக மிளிர்கின்றது. இது அவரது உன்னத ஆளுமையின் வெளிப்பாடாகும்.

## உன்னத ஆளுமையாளர்

திறமைக்கு, தகைமைக்கும் முதலிடம் கொடுக்கும் உன்னத ஆளுமையாளராக தனது கல்வி ஆளுமைகளை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி ஊடாக எமது மண்ணில் விதைத்தவர் கலாநிதி தி. கமலநாதன் அவர்கள் உறுதியான தலைமைத்துவம், திறமையான முகாமைத்துவம், சமூகமட்டத்தில் உயிர்த்துடிப்பான தொடர்பாடல் தேர்ச்சி அவரை உன்னத ஆளுமையாளராக்கியது. இதனால் பலவற்றை அவர் சாதித்தார். இவரது வேண்டுகோளுக்கு இணங்க முகிழ்நிலை ஆசிரியர்களின் பெற்றோர்களினால் விளையாட்டு மைதானத்திற்கான காணி வாங்கிக் கொடுக்கப்பட்டது.

மேலும் முகில்நிலை ஆசிரியர்களின் இணை பாடவிதான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுடைய ஆளுமைகளை உயர்த்தப்பாடுபட்டார். விளையாட்டு – கலை – இலக்கியம், கல்விச்சுற்றுலாக்கள், கல்வியியல் ஆய்வுகள், பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் கல்வியியற் செயற்திட்டங்கள், கள ஆய்வுகள், செயல் நிலை ஆய்வுகள் எல்லாம் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் ஈடுபாட்டுடன் கூடிய வழிகாட்டலுடனேயே மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று ஏழாவது அணி முகிழ்நிலை ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் 2000க்கு மேற்பட்டவர்கள் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயின்று தமிழ்ப்பாடசாலைகளில் கற்பித்து வருகின்றனர். இவர்கள் பீடாதிபதி அவர்களின் இலட்சியங்களை நடைமுறைப்படுத்திவருகின்றனர். ஒரு குறுகியகால ஆறு வருடங்களில் அமைதியாக இருந்து பல சாதனைகள் படைத்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் காலத்தை வென்ற சேவையாளராகக் காட்சி தருகின்றார்.

# கல்வியை இற்றைப்படுத்துகையும் சர்வதேச பிரவேசங்களும்

பாலசுப்பிரமணியம் தனபாலன்
Ba(Cey), PGDE (merit), Dip in Psy 1st class
Dip in Guidance counceling, M.Phil in Ed

கல்வியே ஒரு நாட்டு அபிவிருத்தியின் கருவி என்ற நிலையில் முதன்மை பெறுகின்றது. தேசத்தைக் கட்டி எழுப்புதல் அல்ல நாட்டு மேம்பாட்டிற்கான அடிப்படைகளைக் கல்வியே கொண்டுள்ளது. கல்வியில் இற்றைப் படுத்தலே முதன்மைக் காரணியாகத் தற்போது உள்ளது. மேலும் எந்த ஒரு துறையிலும் இற்றைப்படுத்தல் இல்லையேல் பின்னடைவுகளே ஏற்படும். கல்வியை இற்றைப்படுத்தலினூடாக பின்வரும் மூன்றுபடி நிலைகளினூடான பிரவேசங்களைச் சர்வதேச கல்வி நிறுவகம் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

1. கல்வி கிடைக்கப் பெறக்கூடிய அமைப்புக்களை விரிவாக்குகை – கலைத்திட்டங்களை இற்றைப்படுத்துதல்.

2. சம வாய்ப்பும் – சம கணிப்பினூடான சர்வதேச நிலைகளுடன் பொருந்துதல்

3. அறிவின் உன்னதங்களை (Excellence) நோக்கி ஒவ்வொரு வரையும் திசைமுகப்படுத்தல்


உலகில் ஒவ்வொரு பிள்ளையும் தான் சார்ந்த குடும்பச் சூழலுக்கு வெளியே கல்வியைப் பெறுவதற்காக நாடும் அடிப்படை நிறுவனம் பாடசாலையாகும். பொதுக் கல்வியமைப்பில் பாடசாலைகளே முதன்மை இடத்தை வகிக்கின்றன. நாட்டிற்கும் சமூகத்திற்கும் சுமையாகாத, நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பினை நல்கக் கூடிய அதே சமயம் ஆளுமையுடைய பிரசைகளை அளிக்க வேண்டியவையும் பாடசாலைகளே ஆகும். எனினும் எமது நாட்டைப் பொறுத்த வரை மேற்குறிப்பிட்ட மகத்தான பணிகளை ஆற்றுவதில் எமது பாடசாலைகள் சோர்வுற்று உயிர்ப்பற்று பல பின்னடைவுகளைக் கொண்டிருப்பதைப் பலரும் விமர்சிக்கின்றனர்.

குறிப்பாக அரசாங்கப் பாடசாலைகள் முறைசார் கல்வியமைப்பு தொடர்பான பல கேள்விகளும் கல்வி தனியார் மயமாகி சர்வதேச நிலமைகளுடன் பொருந்தும் போக்கில் சென்று கொண்டிருக்கின்றது.

மேல் மாகாணத்தில் 51 றும் மத்திய மாகாணத்தில் 16றும் வடமேல் மாகாணத்தில் 7ம் சப்பிரகமூவாவில் மூன்றும், தென்மாகாணத்தில் நான்கும், ஊவா, வடகிழக்கு மாகாணங்களில் தலா இரண்டும் 1980 ஆம் ஆண்டு 17ம் இலக்கச் சட்டப்படி சர்வதேசப் பாடசாலைகளின் எண்ணிக்கை விரைவாக அதிகரிக்கின்றன. நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு பயின்று வருகின்றார்கள்.

இலங்கையின் இற்றைப்படுத்தல் கல்விச் செயலாற்றுகையில் இப்பாடசாலைகளின் வேகம் கல்வியமைப்பிலே பல தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. மேலும் இது தொடர்பான முறையான ஆய்வுகள் வெளிவரின் அதிர்ச்சி தரும் பல தகவல்கள் வெளிவரும். பணம் உள்ளவர்களே படிக்கக் கூடிய வர்க்க ருவனை மீண்டும் உறுதிப்படுத்துகின்றவையாகச் சர்வதேச பாடசாலைகள் விமர்சிக்கப்படுகின்றன. இதனை மையமாக வைத்து ஏனைய அரசாங்கப் பாடசாலை அமைப்புக்களைத் தரமுள்ளதாக்க வேண்டிய மிக அவசர தேவை இன்று எழுந்துள்ளது. இத்தேவை இன்று வரை புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. இது பாரதூரமான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். இத்துடன் இன்றைய மாணவர்கள் பிரத்தியேக தனியார் கல்விக்குச் செல்லுதலும் வேகமாக அதிகரித்து வருகின்றது.

**இலங்கையில் கல்வித் தரத்தின் படி பிரத்தியேகக் கல்விக்குச் செல்லும் மாணவர்கள்**



அட்டவணையின்படி மாணவர் குடித்தொகையில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் நிகழ்வுகள் உயர்ந்தும் – அதிகரித்தும் செல்வதானது நாட்டின் முறை சார்ந்த கல்வி அமைப்பு தொடர்பான நம்பிக்கையினை குறிப்பதாக உள்ளது. மாணவர் குடித்தொகையில் தனியார் கல்வியின் எண்ணிக்கையானது கல்வி மட்டத்துடன் சேர்ந்து ஆரம்ப தரங்களில் 42 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் செலவிலும் இதற்கு இணையான அதிகரிப்புக் காணப்பட்டது.

## பாடசாலைகளை விட்டு வெளியேறியவர்களுக்கான கல்வியும் தொழிலும்

பாடசாலையை விட்டு விலகிய பெருமளவிலான மாணவர்களுக்கு தொழில் கல்வியை வழங்குவதிலும், பல்கலைக்கழக அனுமதிப்புள்ளி கிடைத்தும் அனுமதி பெறாத அல்லது க.பொ.த சாதாரணம் உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கான பல்கலைக் கழகப்பட்டதையும் அதனோடு இணைந்த தொழிலையும் தொடர் தொழில் வாண்மையையும் வழங்கக் கூடிய மிகப் பெரும் துறையாக இன்று இலங்கையில் தனியார் துறை வளர்ந்துள்ளது. இதற்குச் சாதகமான உத்வேகங்களையும், தரநிர்ணயங்களையும் ஆதரவையும் சர்வதேச வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் வழங்கி வருகின்றன. இவை இலங்கையின் கல்வியமைப்பின் இற்றைப்படுத்துகையில் பாரிய தாக்கங்களையும் வலுவான இடத்தையும் பெறத் தொடங்கியுள்ளன.

இது அரசாங்கத்துறையின் உயர் கல்விப்பல்கலைக்கழகக் கல்விக்கு சவாலாகவும் தர நிர்ணயப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளன. தேசிய பல்கலைக்கழகங்களில் பயின்றவர்களை விட தனியார் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்றவர்கள் சிறந்த தேர்ச்சிகளையும் தொழில்களையும் பெற முடிகின்றது. மேலும் க.பொ.த சாதாரண தரத்தில் உயர்தரத்தில் சித்தி பெற்ற எமது மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் குறைந்த கட்டணத்துடன் பகுதி நேர வேலையைச் செய்து படிக்கக்கூடிய பெருமளவு வாய்ப்புக்களை வழங்கத் தொடங்கியுள்ளன.

## இலங்கையின் கல்வியில் சர்வதேசம்


சர்வதேச பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் கலைத்திட்டம் உடனடியாகத் தொழில் வாண்மைத் தேவைகளை நிறைவேற்றுவனவாக இருக்கின்றன. இன்று இலங்கையில் பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் உள்ளநாட்டு தேசிய பல்கலைக் கழகங்களில் தமது உயர் கல்வியைத் தொடராது தாம் தெரிவு செய்த கல்வித்துறையில் கிடைக்கக் கூடிய பரந்த வரிசையிலான வாய்ப்புக்களை நாடும் நிலையில் சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் வசதிகளை வழங்குகின்றன. அத்துடன் ஏற்கனவே தொழிலில் உள்ளவர்கள் தமது வாண்மையை விருத்தியாக்க பல கற்கை நெறிகளை இப்பல்கலைக் கழகங்களில் பயில்கின்றனர். பாடசாலைக் கல்வி, பட்டதாரி முன் கல்வி தொழிற்துறை சார்ந்த பரந்த சேவைகளையும், வாய்ப்புக்களையும் இச்சர்வதேச கல்விப் பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன.

மற்றும் இலங்கையின் உள்ளூர் தனியார் நிறுவனங்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து பல வகையான கற்கை நெறிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொண்டு வருகின்றன. நேரடியாக மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, தென்கெரியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கடனா, அமெரிக்கா தங்களது சர்வதேச கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் ஊடாகப் பல வகையான பாடநெறிகளை ஊடாக பலவகையான பாடநெறிகளை இலங்கையிலும் தமது நாடுகளிலும், ஏனைய நாடுகளிலும் வழங்கி வருவதுடன் கவர்ச்சிகரமான - பரந்துபட்ட சலுகைகளையும் வழங்குகின்றன. பல கண்காட்சிகளையும், வெளியீடுகளையும், வழிகாட்டல் செயலமர்வுகளையும், இன்டர்நெட், வெப்சைட்டுக்களையும் திறந்துள்ளன. இவை மூலமாக இலகுவாக மாணவர்கள் இக் கற்கைகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

உதாரணமாக மலேசியா நாடு தற்போது பல சலுகைகளை அறிவித்து வெளிநாட்டு மாணவர்களை கல்வி - பகுதி நேர தொழில் வசதிகளையும் வழங்கி வருகின்றது. இது தொடர்பாக WWW Study Malaysia.com/ips முகவரியைப் பார்க்க முடியும். இவ்வாறே சிங்கப்பூரில்

பயில WWW. Sim. edu. Sg தொடர்புகளை ஏற்படுத்தலாம். இவ்வாறு எல்லா நாடுகளிலும் தற்பொழுது வெளிநாட்டு மாணவர்களைக் கவர்ந்து சலுகைகள் வழங்கும் திட்டங்கள் அதிகரித்து வருகின்றன. மேலும் இந்நாடுகளின் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் பல கிளைகளினூடாக சர்வதேச தரத்திலான கல்வியையும் தொழில் வாண்மைகளையும் வழங்கி வருகின்றன. இவற்றை எமது மாணவர்களும் பெற பல வழிகாட்டல்களையும் செயலாற்றுகைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.


இவ்வாறாகக் கல்வியானது இற்றைப்படுத்தலினூடாக சர்வதேச மயமாகி வரும் இன்றைய மிக முக்கியமான செயன்முறையை இலங்கை கணித்து அதற்கேற்ற விதத்தில் தனது கல்வி தொடர்பான பல முகாமைத்துவ, அபிவிருத்திச் சீர்திருத்தங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தப் புதிய நீரோட்டத்தில் இருந்து யாரும் விலக முடியாத நிலையில் பராமரிக்கப்பட்ட வாழ்க்கை முறையை ஏற்படுத்தல் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கி சுய நிறைவை உண்டாக்குதல், மனித வளவிருத்தியில் அனைவரையும் சர்வதேச ரீதியில் பங்கு பற்றி கல்வியினூடாக அபிவிருத்தியை ஏற்படுத்தலுக்கான முனைப்புக்களை விலைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. தனியார் மயமாக்கலில் கல்வியை ஊக்குவித்து, வறியவர்களுக்கு அரச உதவியுடன் இரட்டை முகாமைத்துவ நடைமுறைகளில் எம் நாட்டுக் கல்வியை சர்வதேச தரத்திற்குக் கொண்டுவர வேண்டியுள்ளது.



# கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களது அர்ப்பணிப்பில் உருவாகியதே

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

தம்பிராசா சிவகுமார்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



சிந்தனை, சொல், செயல் எனும் மகுட வாக்கியத்தை தாரக மந்திரமாகக் கொண்டு தரணியிலே தண் ஒளியினால் தேசிய கல்வியியற் கல்லூரி எனும் தீபத்திற்கு ஒளிகொடுத்து பிரகாசிக்கச் செய்த முதற் பீடாதிபதியும் பிதாமகனுமாகிய கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் அறுபதாவது வயதையடைந்து பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.


ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கி நல்லாசிரியர்களை உருவாக்கும் பணியிலே 17 தேசிய கல்வியியற் கல்லூரிகள் அளப்பெரும் பணியை ஆற்றிவருகின்றன. அந்த வகையிலே, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000ம் ஆண்டு மே மாதம் 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஆறரை வருடங்கள் ஆகின்றன இந்த குறுகிய காலத்தில் கல்லூரி வியத்துகு வளர்ச்சியை அடைந்துள்ளது. இத்தகைய வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமை. கல்லூரி பீடாதிபதியையே சாரும். மேலும் இலங்கையில் உள்ள கல்வியியற் கல்லூரிகளில் முதன்மையான கல்லூரியாகவும் இக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டது என்றால் அதற்கு கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்

அவர்களுடைய தியாகசிந்தையும் அர்ப்பணிப்புமே என்று கூறின் மிகையில்லை ஏனையே கல்லூரிகளைக் காட்டிலும் அதிகமான பாடநெறிகளை தன்னகத்தே கொண்ட பெருமைக்குரிய கல்லூரியாக நமது கல்லூரி மிளிர்கின்றது.

ஈழத்து கல்விச் செல்நெறியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனும் ஆற்றிய கல்விப்பணி 21ம் நூற்றாண்டில் பொற்காலமாகவே திகழ்கின்றது. வானளாவு உயர்ந்த கட்டடங்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கு அடித்தளமாக இருப்பது அத்திவாரங்களே. அவ்வாறான அத்திவாரங்கள் பலகாலம் கடந்த பின்னர் பேசப்படுவதில்லை. அவ்வாறு இல்லாமல் கல்வியியற் கல்லூரி என்ற ஒன்றிருக்கும் வரை மட்டுமல்லாது, ஈழத்து கல்விச் செல்நெறியிலே, கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் ஆற்றிய பணி வருங்கால சந்ததியினருக்கும் கடத்தப்படுவதே நாம் அவருக்குக் கொடுக்கும் கௌரவமாகும்.

கல்வியியற் கல்லூரிகளுக்கெனப் பொதுவான அமைப்பு முறை காணப்படுகின்றது. போதும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றம் தனித்துவமானது. வான்மீக இராமாயணம் உலகத்தமிழ் மக்களால் பேசப்படாத போதிலும் கம்பராமாயணம் உலகத் தமிழ் மக்களால் ஆதரிக்கப்படுவதற்குக் காரணம் தமிழர் தம் பண்பாடும், தமிழ் மணம் வீசுவதுமேயாகும். அவ்வாறே இக் கல்லூரி தமிழ் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளதோடு ஏனைய கல்லூரிகளை விட விஞ்சி நின்று முன்மாதிரியாகத் திகழ்கின்றது என்பதை நேரில் பார்த்தவர்கள் பலர் கூறியுள்ளனர். இதற்கு அடிப்படையாகத் திகழ்ந்தவர் எமது பீடாதிபதியே ஆவார்.

## சமயப்பணி




கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் தமிழையும் சமயத்தையம் தன் இரு கண்களாகக் கொண்டு பணியாற்றினார். இவர் ஒரு முருகபக்தன். நல்லூர் ஆலயத்தை வழிபட்டே எக்காரியத்தையும்

ஆரம்பிப்பார். கல்லூரியிலே இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளமை சமய ஒற்றுமையைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. அகில இலங்கை இந்துமா மன்றமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து 2006 யூலை 15 – 17 வரையான காலப்பகுதியில் நடாத்திய இந்துமாநாடு இதற்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

## குருசீட பாரம்பரியம்

குருசீட பாரம்பரியத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் எமது பீடாதிபதியே. தனது மானசீக குருவாக அருட்கவி சி. விநாசித்தம்பி ஐயா அவர்களையும் கல்வி புகட்டிய பேராசிரியர் ப. சந்திரசேகரம், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் வு. துரைரஜா, பேராசிரியர் சு. வித்தியானந்தன், மூதறிஞர் சொக்கன் ஆகியோருக்கு ஆண்டு தோறும் நினைவுச் சொற்பொழிவுகள் நடாத்துவதோடு சிறந்த மாணவ பாரம்பரியத்தையும் உருவாக்கியுள்ளார்.

## சமூகப் பணி




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வெற்றிக்கு வித்திட்ட செயற்பாடு சமூகத்தையும், கல்லூரியையும் ஒன்றிணைத்து சமூகப் பணியாற்றியமையாகும். ஏனைய கல்லூரிகளுக்கும் சமூகத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பில்லை ஆனால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்திற்குப் பணியாற்றுவதையே தலையாய கடமையாகக் கொண்டு ஆறு அணி மாணவர்களை உருவாக்கிய ஆசிரியப் பணிக்கு அர்ப்பணித்து தலை நிமிர்ந்து நிற்கின்றது. யாழ்ப்பாணத்திலே ஆங்கில மொழி அறிவை வளர்க்கும் பணியில் ஆங்கிலம், நூலக விஞ்ஞானம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் வாழும்

மக்களுக்கு விசேட கல்வியறிவு வழங்க வேண்டிய அவசியம் கருதி விசேட கல்வி பாடநெறியும் உருவாக்கப்பட்டது. சமூக முன்னேற்றம் கருதியேயாகும்.



## ஆசிரியப்பணி


கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார் என்பதற்கு அவரிடம் கற்ற மாணவர்கள் கூறிய கருத்துக்களிலிருந்து அறிய முடிகின்றது. அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்ற போது இவர் வகுப்பாசிரியராக இருந்து கற்பித்த மாணவர்களே அதிகூடிய பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றார்கள். என்றும் சமூகக் கல்வியும் வரலாறும் என்ற பாடத்தில் குடா, களப்பு என்பதனை விளங்கப்படுத்தும் போது குடா எனும் போது இதழ்கள் விரிவடைவதையும் களப்பு எனும் போது இதழ்கள் சுருங்குவதையும் கொண்டு குடாவின் வாய்ப்பகுதி அகன்றதாகவும், களப்பின் வாய்ப்பகுதி ஒடுங்கியதாகவும் இருக்கும் என விளங்கப்படுத்தியது தனது மனதிலே இன்று வரை பசுமரத்தாணி போல பதிந்துள்ளதாக மாணவர் ஒருவர் கூறியதிலிருந்து அவரது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை அறிய முடிகின்றது.



## சிறந்த பீடாதிபதி

நான் கண்ட பீடாதிபதிகளில் வித்தியாசமான வரும் முன்மாதிரியாகத் திகழ்பவரும் இவர் என்றே கூற முடியும். ஏனெனில் மற்றைய கல்லூரிகளில் முகிழ்நிலை ஆசிரியர்களது புத்தாக்கப்படைப் புக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவது குறைவு ஆனால் இக்கல்லூரியில் தாராளமாக சந்தர்ப்பம் வழங்கப்படுவதனால் முகிழ்நிலை ஆசிரியர்கள் புத்தாக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் நூல் வெளியீடுகள், இறுவெட்டு வெளியீடுகள், கையெழுத்து சஞ்சிகைகள்,

சிற்பங்கள், ஓவியங்கள் எனப் பல்துறை ஆற்றல் சார்ந்த படைப்புக்கள் தாராளமாக வெளிவந்த வண்ணம் உள்ளன. அத்தோடு விரிவுரையாளர்களும் பல்துறை சார்ந்த நூல்கள் ஆக்குவதற்கும் வழிகாட்டியாகவும் ஊக்குவிப்பாளராகவும் திகழ்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




## கருமவீரன்

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்பதற்கு அமைய கல்லுஸரியை வளர்த்தெடுத்த பெருமை பீடாதிபதியையே சாரும். இக்கல்லூரியின் கட்டட அமைவு விளையாட்டு மைதானம் போன்றன பார்ப்போர் உள்ளங்களை கொள்ளை கொள்வதாக அமைந்துள்ளது. அவ்வளவு பிரமாண்டமான கல்லூரியை உருவாக்கியமை இவரது செயற்திறனையும், செயல் வீரத்தினையுமே பிரதிபலிப்பதாக உள்ளது. இவருடைய அறிவுரையாக சிந்திப்பதை சொல் சொல்வதை செய் என செயலிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமை பாராட்டப்படவேண்டிய அம்சமாகும்.

## ஒழுங்கு கட்டுப்பாடு


வள்ளுவரது குறட்பாவிற்கு உயிர் கொடுத்து செயல் வடிவம் கற்பித்தவர் கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் ஆவார். முகிழ்நிலை ஆசிரியர்களது செயற்பாடுகளையும், ஏனைய நிர்வாக செயற்பாடுகளையும் திட்டமிட்டு ஒழுங்கமைக்கக் கூடிய சிறந்த முகாமையாளராகவும் ஆளுமை வீரனாகவும் திகழ்ந்தார். கல்லூரி கலையரங்கிலே நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வும் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டினை எடுத்தியம்புகின்றது. என நிகழ்விலே கலந்து உரையாற்றிய யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள் பலர் கூறியுள்ளமை பீடாதிபதிக்குக் கிடைத்த கௌரவமாகும்.



## சிந்தனையில் கல்வியியற் கல்லூரி

பீடாதிபதியவர்களின் சிந்தையில் உதித்து உருவாக்கப்பட்ட அனைத்து அம்சங்களும் இவருடைய நேரிய சிந்தனையாக அமைந்துள்ளன. கல்லூரி வாயிலிலே இரு மருங்கிலும் உள்ள சுவர்களிலே செய்யப்பட்ட தமிழர் தம் பண்பாட்டை பிரதிபலிக்கும் கலையம்ச வேலைப்பாடு முடியும் வரை அந்த இடத்திலே கதிரையையும் போட்டு அமர்ந்து அதனைத் தான் நினைக்கும் வகையில் படைப்பதற்கு வழிகாட்டினார்.

காற்றாடி மூலம் நீர் இறைக்கும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போது பீடாதிபதி அவர்கள் கொழும்பு செல்ல நேரிட்டது. அப்பணி என்னிடம் வழங்கப்பட்டது. சில காரணங்களால் அப்பணி தாமதமடைந்தது. பீடாதிபதி அவர்கள் தனது மனைவியை சத்திர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்து அவருக்கு உதவியாக அங்கு நிற்கும் போது நலமறியும் பொருட்டு தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது சுகநலம் பற்றிக் கூறியதோடு உடன் கேட்ட கேள்வி காற்றாடி வேலை முடிந்து விட்டதா என்று. எவ்வளவு துன்பம் வந்த போதும் அவருடைய சிந்தனை கல்வியியற் கல்லூரி மீதே காணப்பட்டது எனலாம்.



## பழம்பொருள் காப்பகம்

கல்லூரியில் காலடி எடுத்து வைக்கும் போது தமிழர் தம் பண்பாட்டுக்கலைக் கோவிலுக்குள் நுழைகின்றோம் என்ற எண்ணம் மனதில் உதிக்கும் பண்பாடு அழிந்து போகக் கூடாது என்ற நல்லெண்ணத் தோடும் எதிர்கால சந்ததியினர் அதனை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணப் பாட்டோடும் பாதுகாக்கும் பணியில்

ஈடுபட்டார். அப்பணியில் ஈடுபடுவதற்கு என்னையும் வழிப்படுத்தினார். முகிழ்நிலை ஆசிரியர்கள் மூலம் கல்லூரியிலே மாட்டுவண்டி, மாட்டுத் தொழுவம் நீர் இறைக்கும் பட்டை கல்லுத்தொட்டி, வீட்டுப் பாவனைப் பொருட்கள் எனப் பல பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழர் தம் பண்பாடு அழிந்து போகக் கூடாது என்பதில் அவர் எவ்வளவு அக்கறையுடன் செயற்பட்டார் என்பதை இவை புலப்படுத்துகின்றன எனலாம்.

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் கல்வியியற் கல்லூரியை ஆரம்பித்து வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் போது பல்வேறு சோதனைகளையெல்லாம் எதிர்கொண்டு மனந்தளராது உறுதியோடு அவற்றையெல்லாம் சாதனைகளாக்கி எமது தேசத்திற்கு ஆற்றிய பணி தேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது. அவருடைய சேவை மேலும் வரை இறையருளை வேண்டி நிற்போமாக.

**குரு சீட பாரம்பரியத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்**
**திரு. கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் ஆவார்**







# பாடசாலைக் கல்வித்தர மேம்பாட்டிற்கான தலைமைத்துவ தகைமைத்திறன் விருத்திக்கான வாய்ப்புக்கள்

- க. பாஸ்கரன் B.sc, Dip in Ed, M.sc
உபபீடாதிபதி
தொடருறு ஆசிரியர் கல்வி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## 1.0 அறிமுகம்

உலகில் ஏற்பட்டு வருகின்ற அரசியல், பொருளாதார சமூக மாற்றங்களின் புதிய போக்கிற்கு ஏற்ப பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்கள் பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றன. முகாமைத்துவம், திட்டமிடல், ஆளணி அபிவிருத்தி, கல்வித்தரம், உறுதிப்பாடு, கணிப்பீடு போன்ற எண்ணகருக்கள் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு விருத்தி செய்யப்படுகின்றன. அதாவது பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம், (School Based Management) பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆளணி அபிவிருத்தி (School Based Staff Development), பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல் (School Based Planning) பாடசாலை மட்ட கணிப்பீடு (School Based Assessment) போன்ற விடயங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து வருகின்றன. ஒரு பாடசாலையின் சகல சென்முறைகளையும் நன்கு திட்டமிட்டு அமுல்படுத்தி உயர் அடைவைப் பெறக் கூடிய ஒரு கற்கும் சமுதாயத்தை (Learning Community) கட்டி எழுப்புகின்ற அர்ப்பணிப்புடன் கூடிய தலைமைத்துவம் பாடசாலைகளுக்கு அவசியமாகின்றது.

எமது பாடசாலைகளில் தலைமைத்துவத்தினை ஏற்கின்ற அதிபர்கள் பாடசாலையின் முதன்நிலை முகாமையாளராகவும் கருதப்படுகின்றனர். பாடசாலையின் அதிபர்களாக நியமிக்கப்படு கின்றவர்கள்.

1. இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள்.

2. கடமை நிறைவேற்று அதிபர்களாக இலங்கை ஆசிரியர் சேவைகளில் பணியாற்றுகின்ற சிரேஷ்ட ஆசிரியர்கள்.

என இருவகுதிக்குள் அடக்க முடியும். இவ்வாறு நியமிக்கப்பட்டு அதிபர்களாக சேவையாற்றுகின்றவர்களது தலைமைத்துவம் தொடர்பான பயிற்சிகள், அனுபவங்கள் கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றன.

1. பாடசாலைகளின் கலைத்திட்ட நிறைவேற்றலுக்கும் முன்னேற்றத் திற்கும் கொடுக்கப்படும் முக்கியத்ததுவம் போதாமை.

2. பாடசாலைகளின் நாளாந்த, வருடாந்த வேலைத்திட்டங்களை வடிவமைத்தல் தொடர்பான குறைபாடுகள்.

3. பாடசலையின் முகாமைத்துவக் குழு, ஆசிரியர் குழு ஆகியவற்றுடன் இணைந்து தீர்மானங்களை மேற்கொள்ளாது தன்னிச்சையாகத் தீர்மானங்களை எடுத்து ஆசிரியர்கள் மீது அதனைத் திணித்தல்.

4. பொருத்தமானவர்கட்கு பொருத்தமான பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்காமை. அதாவது வேலைப்பகிர்வு தொடர்பான திறனின்மை.

5. அதிபர்கள் பாடசாலையில் நடாத்தும் கூட்டங்கள் நன்கு திட்டமிடப்படாமையும் கூட்டங்கள் தொடர்பான நோக்கத்தினை நிறைவு செய்யாமை.

6. நிதி முகாமை தொடர்பான குறைபாடுகள், பாடசாலை வருடாந்த வரவு செலவு அறிக்கைகள் தயாரிக்க இயலாமை, பதிவேடுகள் பேணப்படாமை.

7. வளங்களை உச்சப்பயன்பாடு பெறக்கூடிய வகையில் வள முகாமைத்துவம் பற்றிய அனுபவம் போதாமை.

8. பெற்றோர், நலன்விரும்பிகள் போன்றோரின் ஒத்துழைப்பினை பாடசாலையின் அபிவிருத்திக்கு பெற்றுக் கொள்ளும் திறன் போதாமை.

9. தலைமைத்துவம் தொடர்பான பொருத்தமான நடிபங்கினை அதிபர்கள் ஏற்றலில் உள்ள பிரச்சினைகள்

இவ்வாறான குறைபாடுகளின் பின்னணியில் பாடசாலைகளின் கல்வித்தர விருத்திக்கு போதிய பொருத்தமான வழிகாட்டல்களை பாடசாலைத் தலைமைத்துவம் வழங்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு பாடசாலைக் கல்வித்தர விருத்தியினை மேம்படுத்தி நல்ல கற்றல்பேறுகளை வழங்கக் கூடிய திறன்கள் அவசியமாகும். எனவே தலைமைத்துவத்திற்கான திறன் விருத்தி என்பது ஒரு சட்டக அமைப்புக்குள் கொண்டு வரப்படுதல் வேண்டும். இப்பணியை பல்கலைக்கழகங்கள், தேசிய தொடர் கற்கை நெறிகள், பயிற்சிகள், கருத்தரங்குகள், செயமர்வுகள் போன்றவற்றினை நன்கு வடிவமைத்து வழங்குவதன் ஊடாக நிறைவேற்ற முடியும்.

## 2.0 தலைமைத்துவத்தின் பிரதான சிறப்பியல்புகள்,

தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகள் தொடர்பாக பிரபலமான இரு கல்விமான்கள் Warren Bennis (1994) வியாபார நிர்வாகப் பேராசிரியரும் Stephen Covery என்பவரும் தலைமைத்துவம் தொடர்பாக முன்வைத்த பகுப்பாய்வை சற்று நோக்குவோம்.

## 2.1 Warren Bennis இன் தலைமைத்துவம் தொடர்பான பகுப்பியல்

| இல. | எண்ணக்கரு | எண்ணக்கருவின் விளக்கம் |
|---|---|---|
| 1 | வழிகாட்டல் நோக்கக் கூற்று Guiding Vision | வாண்மைத்துவ ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் அடைய எத்தனிக்கும் நோக்கக் கூற்றினை நன்கு வரையறுத்தல் |
| 2 | விருப்பம் / உணர்வு Passion | கருமமாற்ற எதிர்பார்க்கும் விடயத்தின் மீது விருப்பை ஏற்படுத்தல் |
| 3 | சீரிய தன்மை Intergerty | பலங்கள், பலவீனங்களை அறிந்து நேர்மை உடையவராக இருத்தல் |
| 4 | நம்பிக்கை Trust | மக்களின் மீது நம்பிக்கையைப் பெறுதல் |
| 5 | துணிவு Daring | சவால்களை எதிர்கொள்வதற்கான துணிவை ஏற்படுத்துதல் |
| 6 | ஆவல் Curiosity | தொடர்கற்றலுக்கான ஆர்வத்தை ஏற்படுத்துதல் |

Stephen Covery என்பவர் முன் வைத்துள்ள அதிபர் தலைமைத்துவம் தொடர்பான எட்டு பகுப்பியல்புகளினை சற்று நோக்குவோம்.

## 2.2 STEPHEN COVERY என்பவரது அதிபர் மையத் தலைமைத்துவம் தொடர்பான பகுப்பியல்

| இல. | சிறப்பியல்புகள் | சிறப்பியல்புகளின் விளக்கம் |
|---|---|---|
| 1 | தொடர்ச்சியான கற்றல்<br>Continual Learning | கற்கை நெறிகளைத் தொடர்தல் பயிற்சி பெறுதல், வினாக்களை வினாவுதல் ஆகியவற்றுக்கான விடை காணுதல் |
| 2 | சேவையை அடிப்படையாக கொண்டது<br>Service Orientation | பெற்றுள்ள தொழிலை ஒரு தொழிலாகக் கருதாது வாழ்க் கையே சேவையாகக் கருதுதல் |
| 3 | நேர்த்திறன்களை வெளிக்காட்டுதல்<br>Radiate Positive energy | மகிழ்ச்சிகரமானவராக, வசீகர மானவராக, நம்பிக்கை உடைய வராக, ஆர்வம் உடையவராக, உற்சாகம் உடையவராக இருத்தல் |
| 4 | ஏனையோர் மீது நம்பிக்கை வைத்தல்<br>Believe in other people | ஏனையோர் மீது முத்திரை குத்தாது சந்தேகங்கள் கொண்டு நோககாது, நமபிககை உள்ளவர்களோடு விசுவாசமாக இருத்தல் |
| 5 | முனைப்புடன் இருத்தல்<br>Synergize | புத்தாக்கமுடையவராகவும், முன்னின்று உழைப்பவராகவும் இருத்தல் |
| 6 | சமனிலையான வாழ்க்கைக்கு இட்டுச் செல்லுதல்<br>Lead a balanced life | அறிவுடையவராக, நிதானம் பேணுபவராக உடலியல் ரீதியாக நல்லாரோக்கியம் உடையவராக சமூகத்தோடு ஒன்றிப்பவராக நல்லறிவுடையவராக இருத்தல் |
| 7 | வாழ்க்கையை துணிகரமாக தாக்கிக் கொள்ளல்<br>Life as an adventure | வாழ்க்கையை துணிவுள்ள தாக்கிக் கொள்ளல் |
| 8 | உடல், உள ரீதியாகவும் சமனிலை உடையவராகவும் இருத்தல்<br>Balance your Physical mental | ஆக்கத்திறன், பிரசினம் தீர்த்தல் வாசிப்பு, எழுத்து, பயிற்சி போன்ற செயற்பாடுகளில் ஊக்கத்தை ஏற்படுத்துதல், தியானத்தில் ஈடுபடுதல் |

# 3. பாடசாலை தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகள்

மேலே தரப்பட்ட தலைமைத்துவம் தொடர்பான இரு பகுப்பாய்தலில் இருந்தும் பாடசாலைத் தலைமைத்துவமானது,

1. பாடசாலைகளுக்குப் பொருத்தமான நோக்கக் கூற்றுக்களை தெளிவாக வரையறுத்து அவற்றினை அடையக்கூடிய வகையில் செயற்பாடுகளை வடிவமைத்து அமுல்படுத்தக்கூடிய அர்ப்பணிப்புடையதாக இருத்தல் வேண்டும்.

2. செய்கின்ற தொழில் மீது விருப்புடையதாகவும், தனக்கு கீழ் கடமை புரிகின்ற, சேவையாற்றுகின்றவர்கள் மீது நம்பிக்கையுடையதாக இருக்க வேண்டும்.

3. தமது பலங்கள், பலவீனங்களை அறிந்து, நேர்மைத் தன்மையுடன் தொழிற்படல் வேண்டும்.

4. சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாகவும், ஆக்க பூர்வமானதாகவும், புத்தாக்கமுடையதாகவும் இருக்க வேண்டும்.

5. தொடர்கற்கைகள், பயிற்சிகளுக்கூடாக தனது தகைமைகளை தொடர்ச்சியாகப் பெற்று மேம்பாடு அடையக் கூடியதாக இருக்க வேண்டும்.

6. உடல், உள ரீதியாகவும், மனவெச்சி ரீதியாகவும் சமனிலைத் தன்மை உடையதாகவும் இருக்க வேண்டும்.

பாடசாலைகளில் பல்வேறு வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக ஆரம்பித்து தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு பிரதான காரணி

அதிபரின் அர்ப்பணிப்புடன் கூடிய தலைமைத்துவம் ஆகும். நிர்வாக தலைமைத்துவத்தினை விட பரந்த நோக்குடன் செயற்படும் கற்பித்தல் தலைமைத்துவம் பாடசாலைக் கல்வித்தரவிருத்திக்கு அவசியமானதாகும். பரந்த நோக்கத்துடன் செயற்படும் கல்வித்தலைமைத்துவம் எவ்வாறு உருவாக்கப்படுதல் வேண்டும் என சற்று சிந்திப்போம்.

## 4.0 பாடசாலைத் தலைமைத்துவ திறன் விருத்தி

இலங்கையில் பாடசாலைத் தலைமைத்துவ விருத்தி தொடர்பான ஆய்வுகள் பெருமளவில் இல்லை என்றே கூறலாம் இக்கட்டுரையில் கல்விக்கான தலைமைத்துவம் விருத்தி செய்வதற்கு தேவையான கலைத்திட்டங்களை வெளிநாட்டு ஆய்வுகளில் இருந்து நோக்குவோம்

கல்விக்கான தலைமைத்துவம் வினைத்திறனாக இருப்பதற்கு பல்வேறு திறன்களைக் கொண்டிருப்பது அவசியமானது என தலைமைத்துவம் தொடர்பான ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. (Barond, Uhl 1995)

பாடசாலை அதிபர்கள் நிதி, பாசாலை சட்டம், கணணி தொடர்பான கற்கைநெறிகளினை மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும் ஆளிடைத் தொடர்பாடல் திறன்களையும் உள்ளகப் பயிற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது. (Behar - Horentein 1995)

பாடசாலைத் தலைமைத்துவம் தொடர்பான கற்கை நெறிகளை நடாத்தும் போது குழந்தை விருத்தி, கலாச்சாரம், மொழி என்பவற்றின் பன்மைத் தனமை தொடர்பான விடயங்கள், பாடசாலைச் சமுகம், பாடசாலைக் கல்வி தொடர்பான அறிவுடையவர்களாக்கக் கூடியவகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். மேலும் பாடசாலை நிர்வாகம் சார் உள்ளகப்பயிற்சியில் பங்குபற்றுதல், பாடசாலையின் முன்னேற்றத்தில் பங்குபற்றுகின்ற ஆசிரியர்கள், ஆசிரிய

கல்வியியலாளர்கள், சமுகத்தலைவர்கள், அரசியல் வாதிகள் போன்றோருடன் இணைந்து கருமம் ஆற்றுதல் போன்ற விடயங்களையும் முன்வைக்கின்றனர். தலைமைத்துவ விருத்தியானது ஆய்வின் அடிப்படையில் எழுகின்ற அறிவின் ஊடாக விருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் அதாவது அதிபர்கள், கல்வியியல் ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய தேர்ச்சிகளை பெறவேண்டும் எனவும் Thornton, Clift and Shacht (1993) தமது ஆய்வின் மூலம் சிபார்சு செய்கின்றனர்.

Begley (1995) என்பவரும் Leithwood (1987) என்பவரும் மேற்கொண்ட ஆய்வுகளின் படி அதிபர்கள் தமது தலைமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக பல்வேறு பரிமாணங்களை கொண்டவர்களாக காணப்படுகின்றனர் எனவும் முகாமையாளர், போதனைத் தலைவர், நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்துக் கொடுப்பவர், பாடசாலைகயும் சமுகத்திற்கும்" வசதி செய்து கொடுப்பவர், பிரசினம் தீர்ப்பவர் போன்ற பரிமானங்களை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் எனவும் குறிப்பிடுகின்றனர்.

அமெரிக்காவில் உள்ள அதிபர்களுக்கான தேசிய ஆணைக்குழு (National Commission for Principalship 1990) அதிபர்கள் 21 வகையான ஆட்சிகளை (Domain) கொண்டவர்களாக இருக்கவேண்டும். எனக் கோடிட்டு காட்டுகின்றது. இந்த 21 வகையான ஆட்சிகளையும்

I. தொழில் சார் ஆட்சிகள் (Functional Domain)

II. நிகழ்ச்சித்திட்டம் சார் ஆட்சிகள் (Programmatic Domain)

III. ஆளிடைத் தொடர்பு ஆட்சிகள் (Interpersonal Domain)

IV. விடயம் சார் ஆட்சிகள் (Contextual Domain)

என நான்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் "அதிபர்களுக்கான நியமங்கள் சார் பகுப்பியல்"

(Taxonomy of standards for the principalship) என்னும் ஆவணத்தில் ஆறு முகாமைத்துவம் சார் தொழிற்பாடுகளும், ஊக்குவிப்பாளர், நெறியாளர், மதிப்பீட்டாளர் போன்ற அதிபர்களது தலைமைத்துவம் தொடர்பான நடிபங்குடன் தொடர்புபட்ட எட்டு பிரத்தியேக செயற்பாடுகளும் இனங்கானப்பட்டுள்ளன.

ஆரம்ப பாடசாலை அதிபர்கட்கான தேசிய அமையம் (National Association for Elementary School Principals) வெளியிட்டுள்ள அதிபர்கட்கான தகைமைத்திறன்கள் (Proficiencies for Principals) என்னும் ஆவணத்தில் அதிபர்கட்கான நான்கு அடிப்படை முன் தேவைகளும் மூன்று தகைமைத்திறன்களும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. மேலும் அதிபர்கட்கான தகைமைத்திறன்கள், தலைமைத்துவ தகைமைத்திறன்கள், மேற்பார்வை தகைமைத்திறன்கள், நிர்வாக / முகாமைத்திறன்கள் என மூன்று வகையாக பாகுபடுத்தப்பட்டுள்ளன.

தலைமைத்துவ தகைமைத்திறனானது தகைமைத்துவம் தொடர்பான நடத்தைகள், தொடர்பாடல் திறன்கள் குழுச் செயன்முறைகள் எனவும் மேற்பார்வைத் தகைமைத்திறனானது கலைத்திட்டம், போதனை ஆற்றுகைகள், மதிப்பீடு எனவும் நிர்வாக/முகாமைத்துவ தகைமைத்திறனானது ஓழுகமைப்பு முகாமைத்துவம், அரசியல் முகாமைத்துவம், முரண்பாட்டு முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம் என மேலும் பல உப பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியான அதிபர் தகைமைத்துவ அக்கடமி (Indiana Principal Leadership academy) தகைமைத்துவ விருத்தி தொடர்பான கலைத்திட்டத்தினை வடிவமைத்துள்ளது. இக் கலைத்திட்டம் நான்கு பிரதான பாடப்பரப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

1. தலமைத்துவம்
   - சுயவிழிப்பணர்வு நுட்பங்கள்
   - கற்றலில் கற்பித்தல் நுட்பங்கள்
   - அழுத்தங்களை குறைத்தல்
   - நேர முகாமைத்துவம்
2. பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள்

- பாடசாலை மேம்பாடும்
- திட்டமிடலும் மாதிரிகளும்
- போதனா மேற்பார்வை
- ஆசிரியர் மதிப்பீடு

3. பாடசாலைக் கலாச்சாரம்
   - கல்வியியல் ஆய்வுகள்
   - குழு செயன்முறைத்திறன்கள்
   - நிறுவனக் கணிப்பீடு
   - ஆளணி ஊக்கல்
   - வகுப்பறை முகாமைத்துவம்
   - ஆளணி ஆபிவிருத்தி

4. தொடர்பாடல்
   - வாய்மொழி முல எழுத்து முல தொடர்பாடலகள்
   - பாடசாலை சமுகம் பங்குபற்றுதல்கள்

(H allinger and ansh 1992)

Behar - Horen stein (1995) என்பவர் மாற்றத்தை மையமாகக் கொண்ட மாதிரி (Change - Oriented Model) ஒன்றினை முன்மொழிந்துள்ளார். அம் முன்மொழிவில் 5 பிரதான பாடப்பரப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ஆளிடைத் தொடர்பாடல்
   (Interpersonal Communicator) - குழுச் செயன் முறைத்திறன்கள்
   - தொடர்பாடல் திறன்கள்

2. கலைத்திட்ட நிறைவேற்றம்
   (Implementation of Curriculam) - கலைத்திட்ட விருத்தி
   - போதனா உத்திகள்
   - மதிப்பீட்டு செயன்முறைகள்

3. நிர்வாகத் தலைமைத்துவம்

Administrative Leadership – கூட்டுறவு தொடர்புகள்
– பங்குபற்றல் தீர்மானம் எடுத்தல்

4. வினைத்திறனான போதனைத் தலைமைத்துவம்

Instructional Manayneml – ஆசிரிய மாணவ மதிப்பீடு

5. ஆளணி அபிவிருத்தி

Human resource Development – மாற்றத்திற்கான உத்திகள்
– தொழில் வழிப்படுத்துனர் திறன்கள்
– மெற்பார்வைத்திறன்கள்

## 5.0 முடிவுரை

ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவ திறன்களை விருத்தி செய்வதற்கு பல்வேறு வாய்புக்கள் உண்டு அந்த வகையில் பாடசாலைத் தலைமைத்துவம் திறன் விருத்திக்கான வாய்ப்புக்களும் விரிவுபடுத்துவதும் அவசியமாகின்றது. அதிபர் தலைமைத்துவத்திற்கான திறன்கள் விருத்திசெய்யப்படும் போது பாடசாலைக் கல்வித் தர விருத்தியும் ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை எனலாம்.

## உசாத்துணைநூல்கள்


1. விஜேசிரி குணசேகரா பீ, (1996), பாடசாலை முகாமைத்துவம் தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

2. ஜனசேன புத்பிட்டிய (1999), ஆசிரிய சேவையும் ஆசிரிய வாண்மையும், தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

3. நாணயக்கார K. A. D. C, (2005), பாடசாலைக் கல்வி தரவிருத்தி மதிப்பீட்டு செயன்முறைகள், கல்வி உயர்கல்வி அமைச்சு, கொழும்பு.

4. Arasarathnam I (2001), A Guide to Excallence in Leadership & Management National a Library of Sri Lanka, Colombo

5. Michael Hough of John Paine (1997), Creating Quality Learning Communities National Library of Australia, South Melbourne.

6. Leithwood, K. P, Begly J. (1990) The Nature, Causes & Consequences of Principals practice: An agenda for future research, Journal of Education Administration.

7. Dianne Yee (2004), Developing Educational Leaders for the 21st Century, University of Calgary.

8. http : // www. ucalgary. ca/eda. htm.



# MAJOR APPROACHES IN GUIDANCE AND COUNSELLING

**T. Mohan,**
*Lecturer-English,*
*Jaffna National College of Education*

Nowadays Guidance and Counselling is considered to be a major discipline in the curriculum components of the Educational field all over the world. Practically the value of Guidance and Counselling is felt very much in the Educational Institutions in order to reduce stress and depression among the present day students who have got to face traumatic situations in their day to day life.

Guiding the students to enable them to realise their own selves to face various challenges in the daily life is the main aim of the Guidance and Counselling process. When finding solutions to the individual problems various Psychological approaches become the basis. Among them **Psychoanalytic Approach** and **Humanistic Approach** can be considered as the major ones.

## Psychoanalytic Approach

**Sigmund Freud** (1856-1939) is a well known psychologist who analysed thousands of dreams before introducing Psychoanalytic approach to the field of Psychology. His psychological findings are mainly based on his **theory of**

**mind** and his **stages of psychosexual development**.

## Freud's theory of mind

According to Freud the mind is divided into three parts- **conscious**, **preconscious** and **unconscious**. The conscious mind consists of those thoughts which are currently the focus of attention. The preconscious mind consists of information and ideas which can be retrieved easily from memory and brought in to consciousness. The unconscious mind consists of information which is either very hard (or almost impossible) to bring into conscious awareness. He further argued that the mind's development changes with age.

- The **id** is present at birth and contains the sexual and aggressive instincts. The sexual instinct is known as libido. It operates according to pleasure principle, with an emphasis on immediate gratification.
- The **ego** emerges in the first two years of life and represents the conscious rational mind. It works on the reality principle taking account of what is going on in the environment.
- The **superego** emerges around the age of five as a result of identification with the same sexed parents. Whilst the id is largely unconscious the ego is conscious. The superego is partly conscious and partly unconscious. The emergence of the ego and superego during the course of development has important implications, particularly when conflicts arise among three parts of mind. For example, there are

frequent conflicts between the id and the superego. The reason for this is that the id desires immediate gratification, but the superego takes account of moral standards. To protect itself (from conflicts) the ego has developed **defence mechanism** such as repression, displacement and denial.

Therefore it is clear that Freud changed our view of humans by stressing the importance of unconscious mind and exploring how early childhood can have a long-term effect on our development.

## Theories of Psycho sexual development

Alongside the development of the mind, Freud proposed a theory of sexual development suggesting that adult personality had its roots in these early stages development.

**Summary of the Stages of Psycho sexual development.**

| Stage | Age | Key focus |
|---|---|---|
| Oral | 0-18 months | Oral activities/sucking chewing |
| Anal | 18-36 months | Interest and focus on anal activities. |
| Phallic | 3-6 years | Genitals become main source of satisfaction. |
| Latence | 6years-puberty | Boys and girls spend little time together. |

Genital from onset of puberty Focus on sexual pleasure

Now we can come to a conclusion that:-

- Freudian theory is remarkably covering a whole range of human phenomena.
- Evidence does support the view that adult personality depends in part, on childhood experiences.
- There is an emphasis on sex and aggression as the main motivating forces of human behaviour.
- Freudian theory emphasises how early childhood can link to later vulnerability.
- The theory tends to pay too little attention on later experiences and role of genetics.
- Freud's work on defence mechanisms and the role of the unconscious mind have also contributed to contemporary theories about mental illness and memory loss.

## Humanistic Approach

Humanistic approach is a theoretical alternative to the Psychoanalytic and behavioural approaches. Humanists share a respect for the person's subjective experiences as well as trust in the capacity of the client to make both positive and constructive choices. In short, the humanistic view believes that each individual has within him or herself a nature and a potential that he or she can actualize. **Carl Rogers' (1961) Humanistic approach** which is considered as person centred approach focuses on experience and emphasises the **uniqueness** of the individual and the search for **self actualization**. Therefore the

primary function of this approach is to provide a climate to helping the individual become a fully functioning person.

Secondly, this approach aims towards a greater degree of independence and integration of the individual. The emphasis on the person not on the person's problem. And Rogers firmly believed that this approach stretched beyond simply solving a problem. Instead it functioned as a means to help individuals in their growth process. So that they could not only cope better with the current problems but they could also face future problems.

Rogers believed that people must be fully honest with themselves. In addition, he thought that a fundamental function of the counsellor is to facilitate the personal discovery of the client basing on the **triangular relationship**. The three sides of the triangle are composed of the **Perceived Self** (how person sees self and others see them) the **Real Self** (how person really is) and the **Ideal Self** (how person would like to be).

When practically speaking the humanistic approach would concentrate upon the development of the child's **self concept**. If the child feels good about him or herself that is a positive start. Feeling good about oneself would involve an understanding of one's strengths and weaknesses, and a belief in one's ability to improve. A child learns because he or she is inwardly driven, and derives his or her reward from the sense of achievement. This would differ from the **behaviourist** view that would expect **extrinsic rewards** to be more effective. Extrinsic rewards are rewards from the outside world, e.g. praise, money,

stars, etc. **Intrinsic rewards** are rewards from within oneself, rather like a satisfaction of a need. This accords with the humanistic approach, where education is really about creating a need within the child, or instilling within the child's self motivation. Behaviourism is about rewards from others. Humanism is about rewarding yourself.

Much of a humanist teacher's effort would be put into developing a child's **self-esteem**. It would be important for children to feel good about themselves (high self-esteem), and to feel that they can set and achieve appropriate goals (high self-efficacy). This form of education is known as child centred, and it typified by the child taking responsibility for their education and owning their learning. The behaviourists might advocate positive reinforcement such as praise, and punishment in the form of negative criticism. Both praise and blame are rejected by the humanists. Children can become addicted to praise, and put much effort into receiving praise from their teachers. Such children will often work for the praise and not work if their efforts go unnoticed. Thus, humanistic approach seems to be more appropriate to the present world.

The humanist teacher is a **facilitator**, not a disseminator of knowledge. **Participatory** and **discovery** methods would be favoured instead of traditional didacticism (i.e. learn parrot fashion every thing the teacher says). As well as the child's academic needs the humanistic teacher is concerned with the child's affective (or emotional) needs. Feeling and thinking are very much interlinked. Feeling positive about oneself facilitates

learning. In other words the **activity method of learning teaching** process is completely based on the qualities of the humanistic approach.

And it is clear that Humanistic approach solves problems of individuals on the actualisation path, by believing that an individual is having:

- an openness to experience.
- a trust in themselves, referred to as self-trust.
- an internal source of evaluation.
- a willingness to continuous growth.

Both the above approaches, the Psycho analytic and humanistic approach provide the educational counsellors with the basic ideas to form suitable counselling programmes catering to counselees needs. But the basic difference should be understood clearly: Psychoanalysts believe that human behaviour is controlled and directed by **unconscious internal forces** whereas Humanists perceive behaviour as **holistic**.

**References:**


- Huitt.B (2005), An overview of Humanistic Education, Articles on Approaches.
- Hans.L (2004), Freud's Psychoanalytic Approach, Articles on Personality (Chapter13).

# இலங்கையில் முகமூடிக் கைத்தொழில்

திருமதி M.E.B மரியதாசன்
கல்வியியலாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இலங்கைத் தீவைப் பெருமைக்குரியதாக்கும் பல விடயங்களுள் கைவினைக் கலைப்பொருட்களும் ஒன்றாகும். இத்தகைய கைவினைக் கலைகளுள் முகமூடிக் கலை முக்கியத்துவம் பெறுகிறது. முகமூடிகள் மக்களினங்களின் கலாசார பாரம்பரியங்களுடன் இணைந்தவையாகக் காணப்படுகின்றன. மனிதனால் பொழுது போக்கிற்காகவென உருவாக்கப்பட்ட கலைகள் மனிதன் தனது ஓய்வு நேரத்தைச் செம்மையாகவும் மகிழ்வூட்டக்கூடிய வகையிலும் செலவிட உதவி செய்பவையாகும். இவ்வகையில் தென்னிலங்கையின் பாரம்பரியங்களுள் சிறந்த இடத்தில் வைத்துப் பேணப்படுவது முகமூடிக் கலையாகும்.

இலங்கையின் கரையோரப் பிரதேச மக்களிடையே பிரபல்யம் பெற்றுக் காணப்படும் முகமூடிகள் முதலில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்ற வினாவிற்கு விடைகாண முடியாவிட்டாலும் கூட அவை எதற்காக உருவாக்கப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. நவீன உலகின் மாற்றங்களினால் உருவாக்க நோக்கம் மறுக்கப்பட்ட போதிலும் முகமூடிகளின் கலைப் பெறுமதி இன்றுவரை அதிகரித்துக் காணப்படுகிறது. தென்னிலங்கைச் சிங்கள மக்களிடையே ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முன்பிருந்தே பின்வரும் மூன்று அடிப்படைகளில் முகமூடிகளைப் பாவிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

1) இயற்கையான நாடக முகமூடிகள்

2) நாடகங்களில் பயன்படுத்தப்படும் மனித, மிருக முகமூடிகள்

3) “தொவில்” சமயாசார நிகழ்வில் பயன்படுத்தப்படும் சாத்தான் முகமூடிகள்


வைவினைத் தொழிலான முகமூடிகள் நாடகத்துடனும், மருத்துவத்துறையுடனும் இணைந்த நோக்கங்களுக்காகவே ஆரம்ப காலத்தில் தயாரிக்கப்பட்டு வந்தன. தென்னிலங்கையின் “அம்பலாங்கொட” என்னும் ஊர் முகமூடி வேலைகளுக்கு இன்றும் பிரசித்தி பெற்றதாகக்

காணப்படுகிறது. சர்வதேச ரீதியில் முகமூடிகள் கலையானது வேறும் பல நாடுகளில் பிரபல்யம் பெற்றுக் காணப்படுகிறது. ஆபிரிக்க மக்களின் கலாசாரப் பெறுமதி மிக்க முகமூடிகள் சர்வதேச மட்டத்தில் முதலிடம் பெறுவதை நாம் இன்று அவதானிக்க முடியும். இவை மிகவும் உயர்ந்த கற்பனைகளை உள்ளடக்கியவையாகக் கருத முடியும். அதே போல இயற்கையான நுட்பங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் யப்பானிய முகமூடிகளும் சர்வதேச தரத்தில் புகழ்பெற்றுக் காணப்படுகிறது. இதேபோன்று சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் முகமூடியைப் பயன்படுத்திய புராதன கலையம்ச நாடகங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த வகையில் இலங்கையின் முகமூடிகளும் சர்வதேச தரத்தில் வைத்துப் மதிக்கப்படத்தக்கவை. இலங்கை முகமூடிகள் இந்தோனேசிய முகமூடிகளுடன் ஒத்த தன்மையானதாக இனங்காணப்பட்டுள்ளது. இவை வினோதமானவையாகவும், வேடிக்கைக்குரியவையாகவும் காணப்படுகின்றன.

## நுட்ப முறைகளும் கலைப்பெறுமதியும்

முகமூடிகள் நாடகத்தில் மனிதனால் அணிவதற்குப் பயன்படுத்தப்பட்டமையால் மென்மையான மரங்களினாலேயே செய்யப்படுவது வழக்கம். பாரமற்று இருக்க வேண்டும் என்பது இதன் பிரதான நோக்கமாகும். எனவே இதற்கென "கதுறு", "ருக்கத்தென", "எருமடு" போன்ற மென்மையான மரங்களை முகமூடிகளின் (குணவியல்புகளுக்கு) பாவங்களுக்கு ஏற்ப கடைவதன் மூலம் தயாரிக்கப்பட்டன. கடைபவர்களின் திறமையும், இரசனைத்தேர்ச்சியும் முகமூடிகளின் தரத்தை மேம்படுத்தும் இயந்திரங்களில் உருவாக்கப்படுபவை போன்று ஒத்த தன்மையாக இவை உருப்பெறாது. மாறாக கடைபவனின் கைவினைக்கேற்பவே சிறப்புப் பெறும். முகங்கள் செதுக்கப்பட்டபின்னர் வெள்ளை நிறக் கலவையைப் பயன்படுத்தி முகத் தோற்றத்தை உருவாக்கும் வேலை இடம்பெறும். இச் சந்தர்ப்பத்தில் முகமூடிகளில் பாவத்தைக் கொண்டு வருவது கலைத்துவம் பொருந்திய அம்சமாகும். சாத்தானுக்குரிய பயங்கரத் தன்மையையும், நகைச்சுவை உணர்வையும், உருவாக்கக் கூடியதாயும், மிருகங்களுக்குரிய தோற்றத்தை உருவாக்கக் கூடியவையும். அரசன், அரசி ஆகியோருக்குரிய அழகிய கம்பீரத் தன்மையை வெளிப்படுத்தக் கூடியவையாகவும் ஆக்குவது இதன் கலைத்துவம் சார்ந்து சிறப்புப் பெறும் விடயமாகும்.

இறுதியாக தயாரிக்கப்பட்ட முகமூடிகளுக்கான வர்ணப்பூச்சு இடம்பெறும். இதற்கெனப் பயன்படுத்தப்படும் வர்ணத் தொகுப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. நான்கு அல்லது ஐந்து அடிப்படையான வர்ணங்களே பயன்படுத்தப்படுகிறது. சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை என்பவற்றுடன் கறுப்பும், வெள்ளையும் பயன்படுத்தப்பட சந்தர்ப்பமுண்டு இத்தகைய வர்ணக் கலையானது நாட்டுப்புறக் கலைகளில் காணக்கூடிய உன்னதமான வர்ணம் பொருந்திய கலை ஆக்கமாகும்.




முகமூடிகளின் கலைப் பெறுமதியை அதிகரிப்பதற்கு வர்ணப்பயன்பாடும், கோடுகளும் முக்கியம் பெறுகிறது. மிகவும் நுட்பமான சோடுகளைப் பயன்படுத்துவதனூடாக முகமூடியின் விகாரத்தை அதிகரிக்கவோ, நகைச்சுவை உணர்வை மேலெழச் செய்யவோ முடியும்.



இத்தகைய வேலைப்பாடுகளே கிராமியக் கலைஞனின் கற்பனைத் தரத்தையும் கலைச் செழுமையையும் அதிகரிக்கச் செய்து தரமுடைய கைவினைப் பொருட்களாக்குகின்றன. இவ்வாறு உருவாக்கப்பட்ட முகமூடிகளின் பாதுகாப்புக் கருதியும், கவர்ச்சிகரமாக்கலை நோக்கமாகக் கொண்டும் “ஹெல்” எனப்படும் மரத்தின் பிசின் முகமூடியின் மேற்பரப்பில் பூசப்படுகிறது. இது முக மூடிகளைப் பளபளப்பானதாக தோற்றமளிக்கச் செய்கிறது.


நாடகக் கலையின் அடிப்படையிலும் முகமூடிகளைப் பயன்படுத்துவதற்குப் பல காரணங்கள் முன் வைக்கப்படுகிறது. மனித முகம் போலன்றி முகமூடி நடுநிலையாக அசைவற்று இருக்கும். குறிப்பிட்ட முகமூடியினூடாக எத்தகைய உணர்வலைகளை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறதோ அது நாடகம் தொடங்கி, தேவையான பகுதி



முடிவடையும் வரையிலும் ஒரே அளவிலேயே பேணப்படக்கூடியதாக இருப்பது இதன் அனுகூலங்களுள் ஒன்றாகும். மேலும் மனித முகத்திற்கு ஒத்துவராத வர்ணக் கலவையைப் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதால் மனித முகத்தில் கொண்டுவரமுடியாத சில வெளிப்பாடுகளை முகமூடியில் கொண்டுவரக் கூடியதாக இருப்பது மற்றுமொரு சாதகமான அம்சமாகும். திறமையான முகமூடி ஒன்றில் வெளிப்படுத்தப்படும் உணர்வலைகள் அவற்றின் அசாதாரணமான வர்ணத் திட்டங்கள் நுட்பமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள கோடுகள், அவற்றுள் புகுத்தப்பட்டுள்ள மாறுதல்கள், மிகைப்படுத்தல்கள் ஆகியவை உண்மையிலேயே புதுமையான தோற்றத்தை ஏற்படுத்திப் பார்வையாளனைக் கவருகின்றன.

## முகமூடிகளின் பயன்பாடும் இன்றைய நிலையும்

"கோலம் முகமூடிகள் பலவகைப்பட்ட பாத்திரத் தேர்வுக்கு அமைவாக உருவாக்கப்படுகின்றன. அரசன், அரசி, அகந்தையான அதிகாரி, கபடமற்ற கிராமவாசி, தந்திரமான வர்த்தகன், பிரபல மனிதனை நையாண்டி செய்யும் உருவ அமைப்புக்கள், போர் வீரர்கள், சாதாரண ஆண்கள், பெண்கள், விலங்குகள் போன்ற அனைத்தும் முகமூடிகளாக உருவாக்கப்படுகின்றன. அரசனுக்கும், அரசிக்கும் நாடகம் நடித்துக் காட்டுவது போன்று ஆரம்பிக்கப்படும். அரசனும் அரசியும் நிலையான பாத்திரங்களாக இருப்பர். பொலீஸ்காரர், விதானை, போர்வீரர்கள், மேளக்காரனும் மனைவியும், சலவைக்காரனும் மனைவியும், முதலி போன்றோர் நாடகப் பாத்திரங்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற முகமூடிகள் குறிப்பிட்ட உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். உதாரணமாக அப்பாவித் தன்மையை வெளிப்படுத்தும் சலவைக்காரனின் முகம் சில பற்கள் மட்டும் தெரியவாய். "ஆ" மெனத் திறந்தாற் போன்று அமைக்கப்பட்டிருக்கும்.



"சன்னிக்கான" முகமூடிகள்

"தொவில்" நடனத்துக்குரிய முகமூடிகள் 18 வகையாக உள்ளன. நோய்க்கு பிரதான காரணிகளாக இருப்பவை பதினெட்டு சன்னிகள் என இனங்காணப்பட்டு அந்த 18 சன்னிகளுள் எது நோயாளியைப் பீடித்துள்ளதோ அது விலகிச் செல்லுமாறு கேட்பதற்காக இந் நடனம் ஆடப்படுகிறது. "சன்னிக்கு" சாந்தி செய்யும் சமயாச்சாரங்களும் விலகிச் செல்லுமாறு விநயமாக கேட்கும் நிகழ்வில் இடம்பெறம்.

விகாரமானவையாகக் காட்டப்படும் இரு பக்கங்களிலும் பரந்து காணப்படும். தாமரைக்காது, முழி பிதுங்கிய கண்கள், பெரியவாய், தந்தம், நாகபாம்பு, நீண்ட வளைந்த தந்தங்கள், இரத்தம் வடிந்து தொங்கும் நாக்கு எனப் பயங்கரத்தை ஊட்ட வல்லனவாக சன்னி முகமூடிகள் "தொவில்" நடனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.



முகமூடிகளின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்த "தொவில்" சமய நிகழ்ச்சிகளும், "கோலம்" "சொக்காரி" நிகழ்வுகளும் இன்று அருகிப்போய் அவற்றின் இடத்தை நாகரீகப் பொழுதுபோக்கு நிகழ்வுகள் இடம்பிடித்துக் கொண்டாலும் கூட அவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்ட முகமூடிகள் தமது கலைத்துவத்தை இன்னமும் இழந்து விடவில்லை. மாறாக உத்வேகம் பெற்றுவரும் உல்லாசப் பயணத்துறையை கவர்ச்சிகரமாக்கும் பாரம்பரிய கலையம்சங்களுள் ஒன்றாக இவை காணப்படுவதால் அரசினால் உருவாக்கப்படும் ஓர் கலைக் கைவினைத் துறையாக இது தொடர்ந்து வளர்ச்சி பெறுகிறது. வீடுகளையும், தொழில் நிறுவனங்களையும், உல்லாச விடுதிகளையும் அலங்கரிக்க பயன்படுத்தப்படும் முகமூடிகள் கலை ரசனை உடைய இக்கால எதிர்கால சந்ததியினரைக் கவர்ந்திழுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# நகரமயமாக்கலும் அதன் விளைவுகளும்

திருமதி ஜெ. உதயகுமார்
B.A, Dip - in - Ed (merit) MA in culturel

இன்று உலகம் விரைவான மாற்றங்களிற்கு உள்ளாகி வருகின்றது. அவ்வளர்ச்சிக்கு அடிப்படையான மாற்றங்களாக பலவற்றை குறிப்பிட முடியுமாயினும் அவற்றுள் முக்கியமான ஒன்றாக நகரமயமாக்கல் உள்ளது. கைத்தொழில் புரட்சிகளை அடிப்படையாகக் கொண்ட நகரமயமாக்கல் இன்று பரந்த ஆய்வுக்குரிய சிந்தனைக்குரிய விடயமாக உள்ளது. நகரமயமாக்கலைப் பற்றி விளங்கிக் கொள்ளும் நாம் முதலில் நகரம் பற்றி விளங்கிக் கொள்ள வேண்டும். நகரம் என்றால் என்ன?

பொதுவான சிறப்பப் பணியையும். சமூக இயக்கத்தையும் கொண்ட குடியிருப்பக்கள் நகரம் எனப்படும். ஆரம்ப காலத்தில் விவசாயத்தை அடிப்டையாகக் கொண்டு தோற்றம் பெற்ற நகரங்கள் தொடர்ந்த வர்த்தக நகரங்களாகவும் கைத்தொழில் புரட்சியின் பின் கைத்தொழில் நகரங்களாகவும் தோன்றி வளர்ச்சி பெற்றன.

உலக நாடுகள் அனைத்திலும் நகரவளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே நகரமயமாக்கல் ஏற்படுகின்றது. எல்லா நாடுகளிலும் நகரக் குடித்தொகை மற்றும் நகர நிலையங்கள் தோற்றம் பெற்று வருதல் பணிகள் துறைக்கான விரிவாக்கத்திற்கு உந்த சக்திகளாக விளங்குகின்றன.

## நகரமயமாக்கல்

நகரப்பகுதிகளில் ஏற்படும் மிகையான சனத்தொகை கைத்தொழில் சேவைத்துறை என்பனவற்றின் ஒன்று சேர்ந்த அதிகரிப்பே நகராக்கம் எனப்படுகின்றது. அதாவது அடிப்படை வசதிகளைக் கூட கிரமமாக பெறமடியாத மட்டத்தில் இருக்கும் பிரதேசங்களை கல்வி, போக்குவரத்துத் தொடர்பாடல், சகாதார வசதிகள், இருப்பிடவசதிகள், ஒளிமயமாக்கல், தொழிலுருவாக்கம் (கைத்தொழிற்சாலைகள்) போன்ற செயற் பாடுகளினூடாக விருத்தியடையச் செய்தலே நகரம்யமாக்கல் எனலாம்.

நகரமயமாக்கல் என்பது பல கருத்துக்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. பொதுவாக நகராக்கம் எனக் கொள்ளப்படுவது விவசாயம் சாராத நிலப் பயன்பாடு மற்றும் குடித்தொகை குறித்தவொரு சிறப்பான பகுதியில் ஏற்பட்டு அங்கு ஏற்படுகின்ற உட்கட்டுமான செயற்பாட்டையே நகராக்கம் என்பர். Lumpard (1965) என்பவர் "குறிப்பிடத்தக்க சிறப்புத் தேர்ச்சியும் உயர் தொழினுட்பமும் நகராக்கத்திற்கு அடிப்படை" எனக் கூறியுள்ளார். புவியியலாளர்களைப் பொறுத்தவரை நகராக்கம் என்பது பிரதான நிலைமாறும் செயற்பாடு. (Process of Trans for Mation) என்பதோடு இடஞ்சார் நோக்கையும் (Spetial aspect) அடிப்படையாகக் கொண்டது.

பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சி நகராக்கத்தில் செல்வாக்குச் செலுத்துவனவாக உள்ளன. குடித்தொகையில் ஏற்பட்ட வளர்ச்சி, விவசாயத்தில் ஏற்பட்ட விருத்தி கைத்தொழில், சந்தைச் சக்திகள், சேவைத் துறையிலே ஏற்பட்ட விருத்தி, நகரங்கள் கலாசார நிலையங்களாக முக்கியத்துவம் பெற்றமை போன்ற காரணங்களாலேயே நகராக்க வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. எனவே ஏற்கனவே உள்ள நகரங்களை விரிவடையச் செய்தலும் கைத்தொழில் நிறுவனங்கள், வேலை வாய்ப்புகள், வாழ்க்கை வசதிகள் போன்றவற்றை உருவாக்கிக் கொடுப்பதன் ஊடாக கிராமங்களை நகரங்களாக மாற்றுதலும் நகரமயமாக்கல் ஆகும்.

## நகர மேம்பாட்டைத் தீர்மானிக்கும் காரணிகள்

- நகரை அண்டிய சனத்தொகைக் குவிவு
- துரித வர்த்தகச் செயற்பாடுகள்
- கட்டிட நிர்மாணங்கள்
- நகரை அண்டிய கட்டிட உட்கட்டுமான வளர்ச்சி
- அதிகரித்த வேலைவாய்ப்பு

- போக்குவரத்து வலைப்பின்னல்
- கைத்தொழிற் செயற்பாடுகள்
- கிராம – நகர இடப்பெயர்வு

கைத்தொழில் புரட்சி மூலம் ஏற்பட்ட தொழினுட்ப பொருளாதார மாற்றம் நகராக்க அபிவிரத்தியைப் பொறுத்தமட்டில் முக்கியமான காலகட்டமாகும்.

19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட இயந்திரமயமாக்கல் காரணமாக விவசாயத்துறை தொழிலாளர்கள் தொழிலை இழந்ததுடன் கைத்தொழில் புரட்சியின் விளைவாக கைத்தொழில் மையங்களில் தொழில் தேடல் அதிகரித்தது. இக்காலப்பகுதியில் போக்குவரத்தும் கைத்தொழிலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வளர்ச்சி பெற்றன. இந்த நவீனவளர்ச்சியின் போக்குகளின் விளைவாக உலகின் கிராமச் சனத்தொகையைவிட நகரச்சனத்தொகை வேகமாக அதிகரித்தமையைப் பின்வரும் வளர்ச்சி வீதங்கள் காட்டுகின்றன.

| | ஆண்டு | வீதம் |
|---|---|---|
| அபிவிருத்தியடைந்த நாடுகளின் நகரச் சனத்தொகை | 1970 | 66.6% |
| | 1990 | 72.6% |
| | 2000 | 76% |
| அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் நகரச் சனத்தொகை | 1950 | 17.8% |
| | 2000 | 57% |

நகரமயமாக்கல் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே அதிகம் செல்வாக்குச் செலுத்தியமையைக் காணமுடிகின்றது. 2000ம் ஆண்டு காலப்பகுதியின் பின் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் நகராக்கத்தின் விளைவாக நகரச்சனத்தொகை அதிகரித்துள்ளது. எனினும்

கிராமிய நகரச் சமநிலைகள் பேணப்பட்டமையால் நகரச்சனத்தொகை குவிவு பெருமளவு ஏற்படவில்லை.

நகரமயமாக்கலுடன் ஒன்றிணைந்த கொள்கையே உலக மயமாக்கல் ஆகும். நகரமயமாக்கலில் உலகமயமாக்கலின் செல்வாக்கும் மிகுந்து காணப்படுகின்றது. உலகமயமாக்கல் வளர்முக நாடுகளின் பொருளாதார முறைகளில் ஏற்படுத்திவரும் நேரடியான தாக்கங்கள் பற்றி திட்டவட்டமாக உணர்த்தப்பட்டிரக்கின்றது. உதாரணமாக இலங்கையில் 1960/70களில் உறுதியாக பின்பற்றப்ட்டு வந்த சமூக உடமை பொருளாதாரக் கொள்கைகள் ஏறத்தாள கைவிடப்பட்டு பொருளாதார முறைமை தாராளமயமாக்கப்பட்டது. தனியார் துறை மீதிருந்த பல்வேறு கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி தனியார் துறையிலேயே தங்கியிருக்கிறது என்பது கொள்கை ரீதியாக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வெளிநாட்டுச் செலவாணி, வெளிநாட்டு மூலதனம் மீதிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு இலங்கைப் பொரளாதார முறை உலகப் பொரளாதார முறையுடன் இணைக்கப்படலாயிற்று. இந்தக் கொள்கைகள் கல்வித்துறையின் மீதும் பல முக்கியத்துவம் வாய்ந்த தாக்கங்களை ஏற்படுத்தின. (சோ.சந்திரசேகரம் உலகமயமாக்கலும் கல்வியும்) எனவே நகரமயமாக்கலின் மூலம் பின்தங்கிய கிராமப்பகுதிகள் பொருளாதாரரீதியில் மேம்பட்ட கிராமப்பகுதி மக்கள் அனைவரினதும் வாழக்கைத் தரத்தினைப் பேணவோ அல்லது உயர்த்தவோ முடியும்.

நகராக்கம் என்பது ஒருவகையில் அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரமுறையின் தோற்றத்தினையும் கருதும். நகராக்கத்துடன் ஏற்பட்ட பொருளாதாரத்துடன் இணைந்து கொள்ள அனைவரும் கல்வி பெற வேண்டிய தேவை ஒன்று உருவாகியுள்ளது. அறிவைப் பெற்றவர்கள் முன்னேறிச் செல்ல அறிவைப் பெறாதவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழவேண்டிவரும் என்பதை எல்லா நாட்டு மக்களும் உணர்ந்துள்ளனர் எனவே நகரமயமாக்கல் என்னும் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படாமல் கலந்து கொள்வதற்கு அந்தச் சூழலுக்கேற்ப கல்வியறிவு அவசியம் என்பதை

மக்கள் உணர்ந்துள்ளனர். எனவே நகரமயமாக்கத்தின் விளைவாக மக்களிடையே கல்வியறிவு விளிப்புணர்வை ஊட்டியது.

நகரமயமாக்கலின் விளைவாக ஏற்பட்ட துரிதமான உலகமயமாக்கலினால் செல்வந்தர் - வறியவர் இடையே பாரிய இடைவெளிகள் ஏறபட்டுள்ளன. இந்த இடைவெளிகளைக் குறைப்பதற்கு பல்வேறு கல்விமுறை சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு பாதகமான விளைவுகளில் இருந்து தம்மை காப்பாற்றிக் கொள்ள நாடுகள் முயன்று வருகின்றன.

## நகரமயமாக்கலின் நன்மைகள்

நகரமயமாக்கலினால் மக்களின் கல்வியறிவு வீதம் அதிகரித்தமை , நவீன தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி பெறுதல், மொழிவிருத்தி ஏற்படல், ஆங்கில மொழியின் தேர்ச்சி, தொழில் வாய்ப்பு, பிரதேச அபிவிருத்தி, சேவைத்துறைகளின் விருத்தி, சமூகத்திறன்கள், தொழில்னுட்பவளம், கருவிப்பயன்பாடு, தேர்ச்சி பெற்ற நிபுணத்துவம், மனித உரிமைகள் அறிதலும் பேணுதலும், ஜனநாயகப் பண்புகள், பாலின சமத்துவம், அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆளுகையின் வெளிப்படைத்தன்மை, கலாசாரீதியில் நோக்கும் போது மேல்நாட்டு இசை, துரித உணவு, ஆடை அலங்காரம், திரைப்பாடல்கள் மற்றும் நவீன வாழ்க்கைப்பாணி, நவீன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி போன்ற சாதகமான விளைவுகள் ஏற்பட்டதுடன் உலகமயமாக்கலும் நகரமயமாக்கலும் முக்கிய பங்களிப்புச் செய்கின்றது. மேல்நாட்டு மூலதனம். தொழில்னுட்பம், கலாசாரம், தனிமனிதத்துவத்தை உணர்த்தும் வாழ்க்கைப் பாணி என்னும் அம்சங்கள் நகரங்களில் ஊடுருவி நகராக்கத்தைத் துரிதப்படுத்துகின்றன.

ஒரு நகரில் மத்தியபகுதி வர்த்தக மையமாகவும், நகர்வாழ் மக்களின் வாழ்வியற்பகுதியாகவும் விளங்குகின்றது. வர்த்தகரீதியிலும் பொருளாதாரரீதியிலும் முக்கியம் பெறுவதால் அதிகளவு மக்கள் இப்பகுதியை நோக்கி இடம் பெயர்வதுடன் நவீன மயப்படுத்தப்பட்ட கட்டடங்களை மீள்அபிவிருத்தி செய்தல் போன்ற தேவைகளும்

அழுத்தங்களும் அதிகமாக காணப்படுகின்றது. நகராக்கத்தினால் சாதகமான விளைவுகள் ஏற்படும் அதேவேளை பாதகமான விளைவுகளும் எற்படவே செய்கின்றன.

## நகரமயமாக்கலினால் ஏற்படும் பிரச்சினைகள்

- ☆ அளவுக்கதிகமான சனத்தொகைக் குவிவு கிராமப் புறங்களிலிருந்தும் அயலிலுள்ள சிறிய நகரங்களி லிருந்தும் அதிக மக்கள் இடம் பெயர்வதால் சனத்தொகை அதிகரிப்பு ஏற்படுகின்றது. இதன் காரணமாக இருப்பிட வசதிகள், இதர சேவைகள் என்பன பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அங்கு காணப்படும் மிகையான வளங்கள் தொழினுட்பம் என்பனவற்றால் ஓரளவு தீர்க்கப்படுகின்றன.

- ☆ நகர சேவைகளின் பற்றாக்குறை சொகுசான வாழ்க்கை, வேலை வாய்ப்பு என்பனவற்றால் கவரப்பட்டு மக்கள் நகரை நோக்கி நகர்வதால் நகரப்பகுதி மக்களின் அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்வதில் அரசாங்கம் திண்டாடுகின்றது. கழிவு புதைத்தல், குடிநீர் விநியோகம், கல்வி, சுகாதாரம், பொழுது போக்கு போன்றவற்றைச் செவ்வனே நிறைவேற்ற முடியாத பற்றாக்குறை நிலை காணப்படுகின்றது.

- ☆ சேரிகளின் தோற்றம்:- சேவைகள் பூரணமாகக் கிடைக்காமையால் சேரிப்புறங்கள் தோற்றம் பெறுகின்றன. இப்பகுதியில் வாழ்வோர் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோராகக் காணப்படுகின்றனர்.

- ☆ வீட்டுப் பிரச்சினை:- உலகளாவிய ரீதியில் நோக்கும் போது 100 மில்லியன் (Million) மக்கள் வாழ்வதற்கான இருப்பிட மற்றுக் காணப்படுகின்றனர்.

☆ இன சமூக, ரீதியிலான முரண்பாடுகள் உள்நாட்டுப் போர்கள், வேலையின்மை, கீழுழைப்பு போன்ற காரணங்களால் சொந்த இடங்களை விட்டு வெளியேறும் நிலை காணப்படுகின்றது. இதனால் ஒரு நகரிலேயே பல இன கலாசாரங்களைக் கொண்ட மக்கள் குவிவதால் இன மத ரீதியிலான முரண்பாடுகள் தோன்றுகின்றன.

☆ வேலையின்மையும் கீழுழைப்பும் இன்று எல்லா நாடுகளிலும் கீழுழைப்பு காணப்படுகின்றது. ஒருவர் தனது தகுதிக்குக் குறைந்த வேலையில் ஈடுபடு வாரேயானால் அதனையே கீழுழைப்பு எனலாம்.

☆ கபில நிற நகரங்கள் உருவாகின்றன. இரசாயனப் பதார்த்தங்கள், வழி மண்டலத்தில் சூரிய ஒளியுடன் தாக்கமடைவதால் வளிமண்டலம் கபில நிறமாக மாறுகின்றது. இவ்வாறான நகரங்கள் கபில நிற நகரங்கள் எனப்படுகின்றன. உ + ம் லொஸ் ஏஞ்சல், மெக்சிக்கோ, சிட்னி, டென்வர்.

☆ நகர வெப்பத் தீவுகள் உருவாக்கம் நகரங்களின் கட்டிடங்களின் அதிகரிப்பு, பச்சை வீட்டு விளைவுகளின் அபிவிருத்தி என்பனவற்றால் வெப்பம் அதிகரிப்பதால் நகர வெப்ப தீவுகள் உருவாகின்றன. உ + ம் லண்டன், வொஷிங்டன் பிற்ஸ்பேக்.

☆ நகரவழி நகரங்கள் உருவாக்கம். கைத்தொழிற் சாலையிலிருந்து வெளியேறும் புகை, ஒளி, இரசாயனப்புகை, மிதக்கும் துணிக்கைகள் என்பனவற்றால் வழிமண்டலத்தில் தெளிவற்ற புகார்கள் உருவாகின்றன.

உ +ம் சிக்காக்கோ, பிற்பேக், வொஷிங்டன், சென்லூயிஸ்

- ★ நகரங்களில் இயந்திர சாதனங்களில் இரைச்சல் நகரச் சூழலின் சமநிலையைக் குழப்புகின்றது.

- ★ வாகன நெரிசலும் போக்குவரத்துப் பிரச்சினையும், நகரின் மையத்திலேயே பல்வேறு பட்ட சேவைகளும் குவிந்திருப்பதனால் மக்கள் அவற்றினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பயணம் செய்கின்றனர். வாகனங்கள் அதிகரிப்பதனால் வாகன நெரிசல் அதிகமாக உள்ளது.

இவற்றைவிட சூழல் தரம் குன்றல், சமூக விரோத செயல்களின் அதிகரிப்பு, தொற்று நோய்கள் போன்ற பலதீய விளைவுகளும் ஏற்படுகின்றன.

## நகராக்கத்தில் இலங்கையின் நிலை

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி அந்நாடு எவ்வளவு விரைவாக நகரமயமாகின்றது என்பதிலேயே தங்கியுள்ளது. இலங்கையின் பொருளாதார – சமூக அபிவிருத்தியை எடுத்து நோக்கின் 1950 – 1970 க்குமிடையே மிகவும் வேகம் குறைந்ததொரு வளர்ச்சியே ஏற்பட்டது எனலாம். பொருளாதார வளர்ச்சி இடம் பெற்றாலும் கூட அதனுடன் சேர்ந்த நகரமயமாக்கல் கூடியளவு இயக்கத் தன்மை வாய்ந்ததாகக் காணப்படவில்லை.

நகரமயமாக்கலின் உயிர்நாடியாக விளங்கிய கைத்தொழில் வளர்ச்சி மிகச் சிறியதொரு அடிப்படையிலேயே ஆரம்பிக்க வேண்டியுள்ளது. (வி. நித்தியானந்தன் கிராமியத் தொழிலாளியும் இலங்கையின் பொருளாதார சமூக விருத்தியும்)

1970 ஆம் ஆண்டு தேசிய வெளியீட்டில் கைத்தொழிற்துறையின் பங்கு தேயிலை, றப்பர் போன்ற விவசாயக் கைத்தொழில் உட்பட 13% மாகவே காணப்பட்டது.

இலங்கையில் கிராமிய நகரச் சமநிலை சீர்குலையக் கூடிய பல வளர்ச்சிகள் ஏற்பட்டன. மலேரியா ஒழிப்பு, மருத்துவ முன்னேற்றம் என்பவற்றால் நாட்டின் சனத்தொகை கால் நூற்றாண்டுக் காலப் பகுதியில் இரு மடங்காகியது. வேலைப் படை பெருகியது. வேலையின்மை அதிகரித்தது. கிராமப் புறங்களிலும் கீழுழைப்பு நிலை ஏற்பட்டது. இத்தகைய ஒரு நிலையில் மக்கள் நகரப் புறங்களை நோக்கிப் படையெடுப்பதனைத் தவிர்ப்பதற்காக கிராம நகர மக்களிடையே ஒரு சமநிலை பேணப்பட்டது. நகரப்புற வேலையின்மை, விகிதங்கள், கிராமப் புறத்தினுடையதைவிட மிக உயர்வாக இருக்கவில்லை. கிராமப் புறத்திலிருந்து நகரப்புறம் நோக்கிய அசைவினால் ஏற்படக் கூடிய கசப்பான அம்சங்கள் தவிர்க்கப்பட்டன எனப் பேராசிரியர் வி. நித்தியானந்தன் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் கிராமியத் தொழிலாளியை நகரப்புறம் நோக்கிய அசைவைத் தடுத்த முக்கிய காரணி வரண்ட பிரதேசங்களில் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களாகும். தொழில் வாய்ப்புக்களைத் தேடி நகரங்களிற்குச் செல்லக்கூடிய கிராமியத் தொழிலாளர்களை இக்குடியேற்றங்களில் குடியேற்றியதுடன் நீர்ப்பசான வசதிகள் மின்சார வசதிகள் என்பன செய்து கொடுக்கப்பட்டன. அதுமட்டுமன்றி கிராம – நகர வருமானங்ளிடையே பெருமளவு ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ள முயற்சி எடுத்தது. இவற்றைவிட மக்களிற்கு அரசு வழங்கிய பல்வேறு சமூக சேவைகள் (இலவசக்கல்வி, இலவச மருத்துவம்) நகர்புறம் வேலை தேடிச் செல்வோர் கிராமத் தொடர்புகளைத் துண்டிக்காமை. போக்குவரத்துச் சிறந்த முறையில் இருந்தமையால் வேலை முடிந்ததும் கிராமங்களிற்குத் திரும்பக் கூடிய நிலை இருந்தமை இலங்கை சிறிய நாடாகையால் நகர் புறங்களுக்கும், கிராமப்புறங்களிற்கும் அதிக தூரம் இருக்கவில்லை, அபிவிருத்தியைப் பன்முகப்படுத்தல் போன்ற பல காரணங்களாகும்.

கிராமியத் துறையின் அபிவிருத்தி விவசாய அபிவிருத்திலேயே தங்கியிருப்பதால் விவசாயத் துறையின் மீது கூடிய கவனம் செலுத்துவது அரசின் ஒரு முக்கிய கொள்கையாகும். விவசாய உற்பத்தியை அதிகரிப்பது மாத்திர மன்றி அதனைப் பன்முகப்படுத்துவதும் அரசின் முக்கிய

கொள்கையாக விளங்கியது. அதாவது கிராமங்கள் நகரங்களாக மாற்றமடைந்தன.

பொருளாதார அபிவிருத்தியைப் ஒரு முகமானதாக்கி நகரங்களில் மாத்திரம் வைத்திராமல் அபிவிருத்தியைக் கிராமங்களிற்கும் எடுத்துச் சென்று பன்முகப்படுத்துவதன் மூலம் கிராமங்கள் நகரங்களாக மாற்றமடையச் செய்வதும் முக்கிய கொள்கையாகும்.

1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கம்முதாவ திட்டத்தின் மூலமும் இலங்கையில் பெருமளவு கிராமங்கள் நகரங்களாக மாற்றமடைந்தன.

## நிறைவுரை

அண்மைக் காலங்களில் உலகளாவிய ரீதியிலான பாரிய நகரங்களின் வளர்ச்சியில் நகர அமைப்பும் அங்கு வாழும் மக்கள் தொகையும் அவர்களிற்கான உற்பத்தி நுகர்வுத் தேவை, நடவடிக்கைகளும் போக்குவரத்துச் சாதனங்களின் அதிகரித்த பாவனைகளும், நகர கட்டிட அமைவுகள் போன்ற அவிருத்திகளும், நகரச் சூழல் சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவும் ஏற்பட்டுள்ளன.

நவீன உலகில் ஒவ்வொரு மனிதனும் சூழலைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி வரும் வகையில் பாரிய நகரங்களின் வளர்ச்சியை இனங்காணலாம். தனித்தனியாகத் தேடிப்பெற வேண்டிய வசதிகளை நகரமயமாக்கல் ஒன்றிணைந்து நகர நிர்வாகக் கட்டமைப்புக் ஊடாக வழங்கியது. நகரை அண்மித்த மனிதனது சகல நடவடிக்கைகளும் இன்றைய நவீன காலத்தின் தேவைக்கேற்ப முன்னேற்றமடைந்து வருவது கண்கூடு.

மனித முன்னேற்றத்திற்கான சகல வளங்களையும் வழங்கி வரும் சூழலானது வளங்களின் பயன்பாட்டினால் வெளியிடப்படும் கழிவுகளை உள்வாங்கும் மூலமாகவும் உள்ளது. நகராக்கத்தினால் சாதகமான விளைவுகள் ஏற்படும் அதே வேளை பாதகமான விளைவுகளும்

ஏற்படுகின்றன. நகர வெப்பத்தின் அதிகரிப்பு, சூழல் மாசடைதல், அமில மழை உருவாக்கம், சமூக விரோத நடவடிக்கைகள் அதிகரித்தல், நகரவழி நகர உருவாக்கம் போன்ற விளைவுகளும் ஏற்பட்டு பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே நவீன உலகில் பிரவேசித்துக் கொண்டிருக்கும் மக்களிற்கு அறிஞர்கள் மாநாடுகளிலும், பத்திரிகை வாயிலாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். எனவே தீய விளைவுகளில் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், பயிலரங்குகள் என்பனவற்றின் மூலம் தவிர்க்கலாம். நகரமயமாக்கலைத் தொடர்ந்து எற்பட்ட உலக மயமாக்கல் இன்று கிராம மட்டங்களிலும் செல்வாக்குப் பெறத் தொடங்கியுள்ளது. நகரமயமாக்கலினால் ஏற்பட்ட தொழினுட்பத்துடன் சார்ந்த ஏனைய வளர்ச்சியே இன்றைய உலகமயமாக்கலின் அடிநாதமாக விளங்குகின்றது.

## உசாத்துணை


1. வி. நித்தியானந்தன் "கிராமியத் தொழிலாளியும் இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்தியும்" நடைபெற்ற கிராமிய அபிவிருத்தி கருத்தரங்கு அறிக்கை – 1975.

2. அபிவிருத்திப் பொருளியல் – இதழ் – 4.

3. யாழ்ப்பாணப் புவியியலாளன் – இதழ் – 11–15.
   "இந்தியாவின் நகராக்கப் பிரச்சினைகள்"

4. யாழ்ப்பாணப் புவியியலாளன் – இதழ் – 19.

5. இலங்கை மத்தியவங்கி அறிக்கைகள் – 2003, 2004.

6. Dr. Kumar (1992) Social Demography and Population Studies Lakshmi Narain Agarwal Education Publishers.

# "உங்கையிற்பிள்ளை உனக்கே"

எழுத்துரு - நாடகம்
க. இ. கமலநாதன், விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

திரை விலகும் போது வீடு ஒன்றின் முன் விறாந்தை காட்சியளிக்கும் இராமநாதர் குடும்பத் தலைவர். வானொலிப் பெட்டி ஒன்றை திருத்திக் கொண்டிருப்பார். மூத்த மகன் ரவி சேட் அயன் பண்ணிக் கொண்டிருப்பான். தாய் மனோன்மணி தேநீர் பரிமாறுவார். இரண்டாவது மகள் பரிமளா வெளியில் இருந்து வீட்டினுள் நுழைந்தவள் பூச்செடியை உற்றுப் பார்த்து விட்டு கோபத்துடன் தாயைப் பார்ப்பாள்.

**பரி:-** அம்மா இந்த றோஜாப் பூவை ஆர் பிடுங்கினது.
– அமைதி –
நான் ஒருத்தி கத்திக் கொண்டிருக்கிறன் நீங்கள் உங்கட பாட்டில திரியிறியள்.

**ரவி:-** அம்மா சூடாயிருக்குது. கொஞ்சம். ஆத்துங்கோவன்
(தங்கையைப் பார்த்து) நான் ரீயைச் சொன்னான்.

**பரி:-** யூனிவெஸ்ரி எண்டாப்போல உனக்குப் பெரிய நினைப்பு.

**மனோ:-** அது கிடைக்கேல்ல எண்டதால உனக்கு நெடுகலும் கொதிப்பு.

**இராம:-** என்னப்பா .... என்ன? என்ன? பரிமளா கேட்டதுக்கு பதிலச் சொல்லுங்கோவன்

**ரவி:-** பரிமளா... நீ முதல் ரீயைக் குடி. பூவைப் பிடுங்கினது ஆர் எண்டு நான் சொல்லுறன்.

**பரி:-** இல்லை, ஆர் பிடுங்கினது எண்டு சொல்லு .... என்ன வடிவான றோஜாப் பூ. ஆசை தீரப் பாக்க முடியாமல் போச்சுது. இண்டைக்கு நேற்று இல்லை நெடுகத்தான் இது நடக்குது.

**மனோ:-** ஆளை அறிஞ்சு என்ன வழக்கு வைக்கப் போறியே?

**பரி:-** அந்த விரலை முறிக்கப் போறன்.

**மனோ:-** விரலை முறிச்சால் றோஜாப்பூ கிடைச்சிடுமே
ரீயைக் குடி பாப்பம் .... ஆறப்போகுது.

**இராம்:-** பிள்ளை பரிமளா உன்ர தங்கச்சி பிரியா தான் பிடுங்கிப் போட்டாள். அக்கா அடிப்பாளடி எண்டு சொன்னான். தன்ர ரீச்சருக்குக் குடுக்கப் போறன் எண்டு கொண்டு ஓடிட்டாள்.
(பரிமளா ரவியைப் பார்ப்பாள்)

**ரவி:-** ஐயோ என்னை ஏன் முறைச்சுப் பார்க்கிற. காலமை உனக்கு முதலே நான் வெளிக்கிட்டுப் போனது தெரியும் தான. வந்த உடனே பூவைக் காணல்ல எண்டு அம்மாவைக் கேட்டனான். நீ கத்திப் போனற எண்டும் சொன்னான்.

**பரி:-** வரட்டும் அவ, விரலை முறிக்கிறனோ இல்லையோ பாருங்கோ....

**மனோ:-** என்னடி சும்மா முறிக்கிறன்.. முறிக்கிறன் எண்டு முறுக்கித் தள்ளிக் கொண்டிருக்கிற. முறிச்சுப் போட அது என்ன முருக்கம் தடியே. பூ வெண்டால் நாளைக்கும் பூக்கும் தான்.

**இராம:-** பரிமளா கோவிக்காத பிள்ளை. அழகான பூக்களைக் கண்டால் அதைக் கொண்டு போய் தன்ரை ரீச்சருக்குக் குடுத்து மகிழ்ந்து குதூகலிக்கிறது அவள்ள பிறவிக்குணம்.
விடு ... உன்ர தங்கச்சி தான .... பாவம்.

**ரவி:-** ஏன் இண்டைக்கு என்ன ஆசிரியர் தினமே?

**மனோ:-** அவளுக்கு வரிசம் முன்னூற்றறுபத்தைந்து நாளும் ஆசிரியர் தினம் தான்.
பூ .... இல்லாமல் எப்ப போனவள் பள்ளிக்கு.

**இராம:-** பூவைப் பிடுங்கிக் கொண்டு போகேக்க பாக்க வேணும் அவவின்ர புழுகை என்ன துள்ளுத் துள்ளிக் கொண்டு போனவள் தெரியுமே.

**பரி:-** ஓ...... ஓ ...... இப் பூவோடை போவினம். பிறகு பத்தாம் பன்னிரண்டாம் வகுப்புக்கு வரேக்க பொலிடோல் போத்திலோட போவினம். இது தான் உண்மை. யதார்த்தம்.

**இராம:-** ரீச்சர் மாரில உனக்கேன் பிள்ளை உவ்வளவு கோபம். உப்பிடிக் குதர்க்கம் பேசாதை. ஆசிரியத்துவம் எண்டைக்கும் புனிதமானது.

**மனோ:-** ஒழுங்காப் படிச்சுப் பாஸ் பண்ணத் தெரியாது. குறைபிடிக்கிறா குறை.

**பரி:-** அம்மா .... என்ர இந்த நிலமைக்குக் காரணம் மைனா ரீச்சர். மைனா ரீச்சர் .... (விக்கி விக்கி அழுவாள்)

**ரவி:-** அம்மா .. நீங்க என்னம்மா .... சும்மா அதையும் இதையும் கதைச்சுக் கொண்டு ... "பரி" "செக்கண்ட சையை" எடு நான் உனக்கு "கெல்ப்" பண்ணுவன்.

**மனோ:-** பரி அழாதை எனக்கென்ன உன்னில கோவமே... ஏன் குழம்பிற. அழகிறதை நிப்பாட்டு பாப்பம். பிரியாவின்ர மனத்தையும் குழப்பேலாமற் போச்சுது. நீ இந்த முறை கட்டாயம் "பாஸ்" பண்ணுவ. அதத்தான நாங்கள் எல்லோரும் விருப்புறம்.

**பரி:-** இல்லை .... இல்லை .... என்னால் ஏலாது என்ர மனம் கசங்கிக் கருகி, நொருங்கிப் போய் இருக்கிறது உங்களுக்கு எங்க தெரியப் போகுது.

**மனோ:-** உன்ர கதையைப் பார்த்தால் "ஏ. எல்" எடுக்கிற எல்லோரும் என்ர பண்ணவேணும் எண்ட மாதிரியெல்லே கிடக்கு. படிப்பிக்கிறது மட்டும் தான் ரீச்சேஸ் ன்ர வேலை.

**இராம:-** இவன் உன்ர அண்ணன் ரவிச்சந்திரன் இண்டைக்கு என்ஜினியரிங் செய்து கொண்டிருக்கிறான் சின்ன வகுப்பில படிக்கேக்க தன்ர ரீச்சேஸ்மார் எண்டால் சரியான விருப்பம். எங்கடை சொல்லை எங்க கேட்டான். ரீச்சேஸ் மார் ஸ்கூல்ல சொல்லுறது தான் இவனுக்கு வேதவாக்கு.

**மனோ:-** மூன்றாம் வகுப்புப் படிக்கிற காலம். வழமை போல அண்டைக்கும் அண்ணன்ர பயிற்சிக் கொப்பியைப் பார்த்தன். அதில தவறான ஒரு விடைக்கு ரீச்சர் சரி போட்டிருந்தா.

**இராம:-** ரீச்சர் அதை வேணுமெண்டோ அல்லது விடை தெரியாமல் போட்டதெண்டோ இல்லப்பிள்ளை. ஏதோ கவலையீனம். பிழையைச் சரியெண்டு ரீச்சர் போட்டிட்டா எண்டு சொல்லாமல், இந்த விடை வந்தால் இன்னும் நல்லாவும், பொருத்தமாகவும் இருக்கும் எண்டு அம்மா சொன்னா.

**மனோ:-** வந்துதடி கொண்ணனுக்குக் கோபம். உங்களுக்கு என்ன தெரியும்? எங்கடை ரீச்சரை விட நீங்க பெரிய ஆளோ.... எங்கடை ரீச்சர் சொல்லுறது தான் சரி. அவவின்ர படிப்புத் தெரியுமோ?அடியடா பிடியடா எண்டு அண்ணன் பட்டபாடு. உங்கட அப்பா பி. கொம். நான் பி.ஏ. எண்டு சொன்னாப் போல அண்ணன் சமாதானம் அடைய மாட்டான். எண்டு நல்லாத் தெரியும். அதால எங்களில் தான் மகன் பிழை. இனி உப்பிடிச் சொல்ல மாட்டம் எண்டு குட்டிக்கும்பிட்டுத்தான் கோபத்தை அடக்கினது.

**ரவி:-** அம்மா அந்த மூண்டாம் வகுப்புக் கொப்பியைப் பக்குவமாக வைச்சிருந்து நான் "ஓ. எல்" எடுக்கேக்க காட்டினவா.

**இராம:-** ரீச்சேஸ் மாரில அண்ணன் அண்டைக்கு வைச்சிருந்த அன்பும் பாசமும், மதிப்பும் மரியாதையும் இண்டைக்கும் வைச்சிருக்கிறான்.

**ரவி:-** எழுபத்தாறு வயதைத் தாண்டினாலும் தங்கரத்தினம் ரீச்சர் இன்னும் நல்ல சுகமாத் தான் இருக்கிறா. நல்ல நாள் பெருநாள் எண்டால் அவவின்ர ஆசீர்வாதம் எனக்குப் பரிபூரணமாக் கிடைக்கும்.

(பிரியா புத்தகப்பை முதுகில் தொங்க தண்ணீர்ப் போர்த்தலுடன் வந்து பூச்செடிக்கு ஊற்றுவார்)

**பிரியா:-** பூமரமே பூமரமே நாளைக்கும் எனக்கொரு பூத்தருவாயா? நான் நிறைய நிறைய உனக்கு நீர் தருவேன். நீ மகிழ்ந்து சிரிப்பதை நான் பார்ப்பேன் நான் சிரிப்பதை நீ பார்க்க வேணுமென்றால் நாளுக்கொரு பூவை நீ எனக்குத் தர வேண்டும். இந்தா இந்தா ..... உனக்கொரு சொக்கேட்டும் தருகிறேன். நீ தந்த பூவைக் கண்டதும் என் ஆனந்தி ரீச்சர் எப்படி மகிழ்வார் தெரியுமா?

## பாடல்

தேன்மொழி பேசும் எங்கள்
ஆனந்தி ரீச்சருக்கு
பூ ஒன்று நான் கொடுத்தால்
பூவாய் மலர்ந்திடுவாள்

புன்னகை பூத்திடுவாள்
புத்தெழில் காட்டிடுவாள்
என்கையை மெல்லப் பற்றி
தன்னோடு அணைத் திடுவாள்
பாட்டுப் பாடி ஆட வைப்பாள்
கதைகள் சொல்லிக் கேள்வி கேட்பாள்
நாட்டு நடப்புக்களை
நன்றாகச் சொல்லிடுவாள்

ஓடி விளையாட வைப்பாள்
கூடி வாழ வழி வகுப்பாள்

தேடிப் பெறு கல்வி என்று
நாடி வந்து நன்மை செய்வாள்.

(பாடி ஆடியபடி பிரியா உள்ளே செல்ல தாய், தந்தை, அண்ணன் ஆகியோாரும் உள்ளே செல்வர். பரிமளா எங்கோ வெறித்தபடி பார்த்துக் கொண்டிருப்பாள். பாடலுக்கான இசை இப்போது சோக இசையையாகப் பரவும். பரிமளா மேடையின் நடுப்பகுதிக்கு வருவாள்)

**பரிமளா:-** மைனா ரீச்சர் ....
ஆனந்தி ரீச்சரில் பிரியா காட்டும்
பிரியம் போல் நானும் ஒடுகாலம் உங்களை
என் மனம் முழுக்கிப் பூசித்தேன்
பின்னேர வகுப்பென்றும்
முன்னேறும் வழியென்றும்
என் நேரமும் உங்கள்
பின்னலோடு தானிருந்தேன்
ஏன் ரீச்சர்.... ஏன் ரீச்சர் எனக்கு
இத்தனை சஞ்சலங்கள்
சஞ்சீவன்....
உங்கள் அன்பு மாணவன் தான்.
அஞ்சாமல்
அவனோடு கதையென்று சொன்னீர்கள்
தஞ்சமடி அவனுனக்கு
கதைகள் பல புனைந்தீர்கள்.
வஞ்சம் இல்லா என் மனத்தில்
விதை யொன்று விதைத்தீர்கள்
பார்த்தான் .... பயந்தேன்.
சிரித்தான் .... சிதைந்தேன்
அழைத்தான் அலைந்தேன்
கனவிலும் நனவிலும்
அவன் முகம் கண்டேன்
உயிரிலும் உணர்விலும்

என்னை நான் இழந்தேன்
படித்த பாடங்கள்
அனைத்தையும் மறந்தேன்
பரீட்சைப் படிப்பினைப்
பாதியில் துறந்தேன்
ஆனாலும் அவனை இன்றுவரை
காணவில்லை.
மைனா ரீச்சர் மட்டும்
மாறாது என்கின்றா.
யாருக்குச் சொல்லி அழ
யார் தலையில் போட்டுடைக்க.....

– உள்ளே செல்வாள்.

களம்மாறும் அந்த இடம் ஆரம்பக்கல்வி மாணவர்களின் விளையாட்டு முற்றமாகும்.

முதலாம் தரப்பிள்ளைகள் ஓடி விளையாடிக் கொண்டிருப்பர் ஆசிரியரைக் குறிக்கும் உருவம் ஒன்று தோன்றும்.

**உருவம்:-** ஆம்பிளைப் பிள்ளையளும் பொம்பிளைப் பிள்ளையளும் சேந்தோ விளையாடுறியள். உது பிழை. உது பிழை ஆம்பிளைப்பிள்ளை பொம்பிளைப்பிள்ளை சேர்றது பிழை.

**பிள்ளை:-** ஏன் சேர்? விளையாடினால் என்ன?

**உரு:-** ஏன்? எதுக்கு? எண்டால் என்ன பச்சையாச் சொல்லுறதே?

**பிள்ளை:-** நாங்கள் முதலாம் வகுப்புத்தான சேர்?

**உரு:-** முதலாம் வகுப்பெண்டாப் போல முன்னுக்குப் பின்னுக்கு ஒண்டும் இல்லையே? அந்தா... அந்தா ..... கையைப் பிடிச்சு விளையாடிறியள் விடு. விடு. விடு. கையைப் பிடிக்கக் கூடாது.

**பிள்ளை III:-** ஏன் சேர்? கையில் என்ன கிடக்கு.

**உ_ரு:-** சொல்லுவன் இப்ப. பக்கத்தில வடிவான ரீச்சர்மார் பார்த்துக் கொண்டிருக்கினம் டேய் ஆம்பிளையள் எண்டால் நெருப்பெண்டும் சொல்லுறது. இரும்பெண்டும் சொல்லுறது. பொம்பிளையள் எண்டு சொன்னால் பஞ்செண்டும் சொல்லுறது காந்தம் எண்டும் சொல்லுறது. நெருப்பும் பஞ்சும் எரிய .... இரும்பும் காந்தமும் ஒட்டுப்பட பிறகு கரைச்சல் ... பிறகு கரைச்சல் கனக்க வரும். நீ ஆம்பிளை என்ன? ... "போய்" போய் அதில இரு. நீ பொம்பிளையே கேள் இதில தான் இருக்க வேணும். படிக்கேக்க, கதைக்கேக்க, சிரிக்கேக்க, விளையாடேக்க வெளியில் போகேக்க, உள்ளுக்கு வரக்க, புறிம்பு புறிம்பாத் தான் இருக்க வேணும்.

(மாணவி ஒருவரை அழைப்பார்)

நீ இஞ்சை வா ..... எங்களை நீ..... என்ன நினைச்சுக் கொண்டிருக்கிற. எத்தின நாளாச் சொல்லுறன் பொம்மல் கை வைச்ச யூனிபோமை நீ போடாதையெண்டு. கேட்டியே நீ .... கேட்டியே நீ இந்தப் பாடசாலையின்ர சட்ட திட்டம், ஒழுக்க விதிகள், பண்பாடு பாரம்பரியம் எல்லாத்தையும் மீற நடக்கிற.

**மாணவி:-** சேர் என்னட்டை ஒரு யூனிபோம் தான் இருக்குது சேர்.

**உ_ரு:-** என்ன சொல்லுறீர். வரிசத்துக்கு வரிசம் யூனிபோம் துணி வாரி வழங்கிறம். எங்கட பாடசாலையின்ர சட்ட திட்டம், ஒழுக்க விதிகள், பண்பாடு பாரம்பரியங்களுக்கு அமைவாகத் தைக்கச் சொல்லுறம். நீர் என்னோடை லோக்கதைக்கிறீர் "லோ". வெளியில போய் முட்டுக்கால்ல நில்லும்.

**மாணவி:-** (முட்டுக்காலில் நின்று கொண்டு) தையல் கார அன்ரி பொம்மல் கை வைச்சுத் தைச்சுத் தந்திட்டா சேர்.

**உ_ரு:-** பிறகும் பார் பிறகும் பார் பொடு பொடு எண்டு பொய் சொல்லுறதை. சரி சரி வேறை ஒரு புதுத்துணி வாங்கித் தைச்சுப் போடும் பாப்பம்.

**மாணவி:-** வீட்டில, கஸ்ரம் சேர். வேற துணிவாங்கிக் காசு இல்ல சேர்.

**உ_ரு:-** கொப்பன் என்ன? சொத்தியோ முடமோ? வெத்தில பாக்குச் சீவல், போயில, பீடி சிகரட், கசிப்பு, கஞ்சா, காச்சுச் சாராயம் எல்லாம் வாங்கிச்சிருக்கு இன்னொரு யூனிபோம் தைச்சுப் போடக்காசில்ல. ஆ... ஆ...

**மாணவி:-** எனக்கு அப்பா இல்ல சேர்.

**உ_ரு:-** பாத்தியோ, பாத்தியோ பேந்தும் பேந்தும் பேந்தும் பொய் சொல்லுற. எடுத்துக் கொண்டு வா. கத்தரிக்கோல் பொம்மல் கைச் சுருக்கை வெட்டிவிட்டால் எல்லாம் சரிவரும். (கத்தரிக்கோலால் யூனிபோமின் ஒரு கை பொம்மல் சுருக்கு வெட்டப்படும்)

(மாணவன் ஒருவன் கடிதம் கொண்டு வந்து கொடுப்பான். அவர் வாசிப்பார்)

**உ_ரு:-** கட்டாயக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்திற்கு என்னைப் பிரதான பரப்புரையாளனாக எங்கட பெரியவர் என்னைத் தெரிவு செய்து கடிதம் அனுப்பியிருக்கிறார். நான் பாருங்கோ உளவியல் சம்பந்தமாக உள்ள புத்தகம் எல்லாத்தையும் கரைச்சுக் குடிச்சு பட்டங்களும் எடுத்துப்போட்டான். அந்த வகையில் இந்தப் பொறுப்பு எனக்கு ரொம்பப் பொருத்தம் பாருங்கோ. கருத்தரங்குகள், காட்சிப்படுத்துதலுகள் விளம்பரங்கள், வீதி நாடகங்கள் எண்டு கட்டாயக் கல்வியின் அவசியத்தைப் பற்றி ஒரு முழங்கு முழங்கி விட்டனெண்டால் வயித்துக்க இருக்கிற பிள்ளையும் இறங்கி ஓடிடும் பள்ளிக் கூடத்துக்கு ஓ.... ஓ.... எதுக்கும் முன்னாயத்தம் அவசியம் வாறன்.

(உருவம் மேடையில் இருந்து நீங்க வெட்டிய சட்டையுடன் அந்த மாணவி மேடையின் நடுப்பகுதிக்கு வருவாள்)

**மாணவி:-** எங்கடை வீட்டு நிலமையை விளங்கிக் கொள்ளுற
பக்குவம் இப்ப நிறைய எனக்கு இருக்கு.
வீட்டுக் கஸ்ரங்களை விளங்கிக் கொண்டு
நானென்னண்டு இன்னொரு யூனிபோம்
வேண்டித் தாருங்கோ எண்டு கேக்கிறது
என்ர சட்டைக் கை வெட்டுப் பட்ட உடன
மற்றப் பிள்ளையள் பழிச்ச பழிப்பு.
சிரிச்ச சிரிப்பு ..... எவ்வளவு வெக்கமாக இருந்தது.

(மேடையின் முன் இடத்திற்கு அந்த மாணவி அசைய, முன் வலதிற்கு அந்த உருவம் தோன்றி சொற் பொழிவாற்றலாம்)

**உரு:-** படிக்கிற பருவத்திலே பிள்ளைகள் கட்டாயமாகப் பாடசாலைக்குப் போக வேண்டும். அவர்களுக்கு இருக்கும் தடைகளை நாங்கள் முன்னின்று அகற்றி கல்வி அபிவிருத்திக்கு ஆவன செய்ய வேண்டும். பள்ளிக்குப் பிள்ளையள் கட்டாயம் போக வேண்டும்.

**மாணவி:-** நான் போகமாட்டன். என்னால ஏலாது.

**உரு:-** மனிதர்கள் என்று சொல்லப்பட்டவர்களுக்கு கல்வி அறிவு அவசியம். உரிய காலத்தில் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவர்களின் உரிமை. அதனை உரிய முறையில் கொடுக்க வேண்டியது எமது கடமை கற்க மறுப்பவன். வாழ மறுப்பவன். எல்லோருக்கும் கல்வி அவசியம். பள்ளிக்குப் போங்கோ.

**மாணவி:-** பள்ளிக்கூடத்தைப் பார்க்கப் பயமாக் கிடக்கு.
பள்ளிக் கூடத்தை நினைக்க கோபம் வருகுது.
பள்ளிக் கூடத்துக்கு இனி நான் போக மாட்டன்.

**உரு:-** கல்வி இல்லா உலகு பாழ்.
கல்வியோடு கூடி வாழ்.
அதனால் பெருகும் நன்மை.
இதுதான் இன்றைய உண்மை.

**மாணவி:-** பள்ளிக்கூடத்துக்குப் போ எண்டு என்னைக் கட்டாயப் படுத்தினால் நான் சாவன்.
செத்த பிணமாகச் சுடலைக்குப் போறதும்,
நடைப் பிணமாகப் பள்ளிக்கூடம் போறதும்,
என்னைப் பொறுத்தவரை இரண்டும் ஒன்று தான்

(மாணவி மேடையை விட்டு நீங்குவாள்)

**உ_ரு:-** இப்ப நாடகத்தைப் பாருங்கோ
(ராசன் புலவர் வேடமிட்டவாறு மேடையில் தோன்றுவான்)

**புலவர்:-** கற்கை நன்றே கற்கை நன்றே.
பிச்சை புகினும் கற்கை நன்றே.
மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் மன்னர்க்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

முருகப் பெருமான் ஔவையைப் பார்த்து இனியது எது? என்று கேட்டான். அதற்கு அவள் .........

இனியது கேட்கின் தனி நெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள்ளாரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

புலவர் மேடையை விட்டு நீங்க - ராசனின் தந்தை தங்கராசா தாய் பரமேஸ்வரி மேடையில் தோன்றுவர்.

**தங்க:-** எப்படியப்பா என்ர பிள்ளையின்ர நடிப்பு.

**பரமேஸ்:-** என்ர பிள்ளை யெண்டு ஏன் சொல்லுவான்.
எங்கட பிள்ளை யெண்டு சொல்லுங்கோ.... ரண்டு நாளா உப்பிடியே சொல்லிக் கொண்டிருக்கிறயள்.

**தங்க:-** என்ர எண்டா அது நானும் நீரும் தானேயப்பா.
இண்டைக்கு ஸ்கூலால
வந்த உடனே நான் அவனுக்குப் பொன்னாடை போர்த்தப் போறன்.

**பரமேஸ்:-** பிறகும் பாருங்கோ. நான் பொன்னாடை போர்த்தப் போறன் எண்டு ஒருமையில் கதைக்கிறியள். ரெண்டு பேருமாகப் போர்த்துவிடுவம்.

**தங்க:-** சரியான புழுகில தானப்பா நீர் நிக்கிறீர். ரெண்டு பேரும் சேர்ந்து தான் எல்லாம் சரியோ.

**பரமேஸ்:-** அதிபர், ஆசிரியர் மார் எல்லோரும் மகனைப் பாராட்டேக்க நான் எவ்வளவு சந்தோசப்பட்டனான் தெரியுமே....

**தங்க:-** பதினாறு வயதில நானும் என்ர பிள்ளை மாதிரித்தான் உசாரா இருந்திருப்பன் என்னப்பா.

**பரமேஸ்:-** குடும்பச் சூழலும், பள்ளிச் சூழலும் மகிழ்வான சூழலாக அமையுமெண்டால், உற்சாகத்துக்கும் சுறுசுறுப்புக்கும் குறைவிருக்காது தான.

(மகள் ரஞ்சி ஓடி வருவாள் பின்னால் ராசனும் விரக்தியோடு வருவான்)

**ரஞ்சி:-** அம்மா .... அண்ணனுக்கு பள்ளிக் கூடத்தில் இண்டைக்குச் சரியான பிரச்சனை.

**பரமேஸ்:-** என்ன பிள்ளை சொல்லுற. என்ன பிரச்சனை?

**ரஞ்சி:-** அண்ணா ஏதோ குழப்படி செய்ததெண்டு அந்த "சேர்" "பிறேயரில" பகிரங்கத் தண்டனை குடுத்தவர். அண்ணான்ர கன்னத்தைப் பொத்தி அடிச்சவர். (அழுவாள்)

**தங்க:-** அழாமல் சொல்லு பிள்ளை.... பிறகு என்ன நடந்தது.

**ரஞ்சி:-** பின்னேரம் ரியூட்டரிக்கு அந்த சேர் போகேக்கை .....

(தந்தையின் காதில் ஏதோ இரகசியம் சொல்லுவாள்)

(இசை அபசரமாக ஓங்கி ஒலிக்கும் .... பாடல்")
மனிதர்க்குள்ளே இருக்கும்
மிருகக் குணத்தைச் சீண்டாதே
புனிதர் கூடப் புயலாய்ப்
பொங்கிட வழியொன்று தேடாதே....
வேரொடு சாய்ந்திரும் சூறைக்காற்று
வீறு .... கொண்டதுவே
பாரொடு விண்ணாய்ப் பரந்து பறந்து
தீயென எரிந்ததுவே.

**பரமேஸ்:-** இப்ப என்னப்பா செய்யிறது?

**தங்க:-** பொன்னாடையை ரெண்டு பேருமாகப் போர்த்து விடுவம். (கோபமாக) கட்டிளமைப் பருவத்தைப் பற்றிக் கதை கதையாச் சொல்லுவாங்கள். கருத்தரங்குகள் வைப்பாங்கள். பிறகு தங்கட வங்கிரங்களையும் வளர்த்துக் கொள்ளுவாங்கள்....

மகன் ... நீ என்ர பிள்ளை. எனக்கு விசயம் விளங்கும். நீ அமைதியாக இரு. நான் அதிபரைப் பார்த்திட்டு வாறன்.

**பரமே:-** நானும் வாறன் ... (இருவரும் செல்வர்) ராசன் மட்டும் மேடையில் தனியாக இருப்பான்)

**ராசன்:-** நான் பிழை செய்திருந்தால் உங்கடை
தண்டனையை முழுமனத்தோடை
ஏற்பன் எண்டு சொன்னனான்
ஒண்டில்ல பத்தில்ல நூறு அடிவாங்கவும்
தயார் எண்டு சொன்னனான்.
பகிரங்கமாக வேண்டாம் சேர் ...

மற்றப்பிள்ளைகளுக்கு முன்னால வேண்டார் சேர் ....
அதிலும் என்ர வகுப்புப் பொம்பிளைப் பிள்ளையளுக்கு
முன்னால வேண்டாம் சேர்
உங்கட காலைப் பிடிச்சுக் கெஞ்சினனான்.
கையெடுத்துக் கும்பிட்டனான்.
(கோபமாக) அடிச்சுப் போட்டியன் அடிச்சுப் போட்டியள்.
பொம்பிளைப் பிள்ளையளுக்கு முன்னால அடிச்சுப் போட்டியள்
வெக்கமாக் கிடந்தது. விசராக் கிடந்தது.
சேர் ... நீங்க எனக்கு அடிச்ச அடி வலிக்கேல்ல....
என்ர வகுப்புப் பிள்ளையள் எல்லாம் பாத்துதுகள்.
அந்த வலி ... அந்த வலி என்னால் தாங்கேலாமல் போச்சுது
அதுக்குப் பிறகு... அதுக்குப் பிறகு
நான் .... நானாக இயங்க ஏலாமல் போச்சுது.

(உள்ள செல்ல தங்கை ரஞ்சி வருவாள்)

**ரஞ்சி:-** அண்ணா நீ ஆறுதலுடைய வேணும்.
மனத்தைப் பக்குவப்படுத்த வேணும்
பிறேயரில எல்லாருக்கும் முன்னால் தண்டனை பெற வரேக்க.
உன் முகத்தில் உறைஞ்சு போயிருந்த சோகம் ...
ஓங்கி உன்ர கன்னத்தில் அடி விழேக்க
அண்ணா நான் வாய் விட்டு அழுதனான் ...
கன பிள்ளையள் அழுதவ....
நான் இனி அந்தப்
பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டன்.
எந்தப் பள்ளிக்கூடத்துக்கும் போக மாட்டன்.
எங்கட மனங்களைக் கசக்கிப் பிழியிற கூடங்கள்
எல்லாம் பள்ளிக்கூடங்கள் அல்ல
கல்விக் கூடங்கள் அல்ல ....

(தங்கராசா பரமேஸ் மேடைக்கு வருவர்)

**தங்க:-** சம்பந்தப்பட்ட எல்லோருடையும் கெஞ்சி மண்டாடீட்டம். காலிலிழந்து மன்னிப்பும் கேட்டிட்டம் மகன் ராசன் நீ பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டால் தொடர்ந்து படிக்க வாய்ப்பிருக்கு. இல்லையெண்டால் படிப்பையும் கைவிட்டு கோடு கச்சேரி எண்டு தான் திரிய வேண்டி வரும். மகன் சரி பிழையைப் பற்றிப் பிறகு ஆராய்வம். நீ அவரிட்டை மன்னிப்புக் கேள். கேட்கத்தான் வேணும். எதிர்காலம் எண்டு உனக்கொண்டிருக்கு.

**பரமேஸ்:-** மன்னிப்புக் கேட்கிற தில என்னையா இருக்குது. ஏன் முகத்தைச் சுளிக்கிற. ஏதேன் கதையன். என்னெண்டாலும் மனம் விட்டுக் கதை. பேசாமல் இராதை.

**தங்க:-** உன்னைப் பற்றிய கனவுகள், ஆசைகள், இலட்சியங்கள் எல்லாம் நிறைய நிறைய மனம் நிறைய இருக்கு. மன்னிப்பு எண்ட ஒரு சொல்லில தான உன்ர வாழ்க்கையே இருக்கு. நாளைக்குக் காலையில மன்னிப்புக் கேள். மன்னிப்புக் கேட்கிற. நாளைக்கு நான், அம்மா உன்னோடை சேர்ந்து வாறம்.

(ராசன் விரக்தியுடன் உள்ளே செல்வான்)

**பரமேஸ்:-** ராசன்ர முகத்தைப் பாத்தா அவ்வளவு நல்லா இல்ல. மன்னிப்புக் கேட்கச் சம்மதிக்க மாட்டான் போல இருக்கு.

**தங்க:-** இந்த வயதில அப்பிடித் தான் இருக்கும். இதை அவர் விளங்கிக் கொள்ளுனம் இல்லையே.... இனி அவனைத் தெண்டிக்க வேண்டாம். மன்னிப்புக் கேட்க மாட்டன். எண்டால், இந்தக் கதையை இத்தோடை விடுவம். வீட்டோட நிக்கிறதோ? வெளிநாடு போறதோ? ..... அல்லது தோட்டம் துரவு செய்யிறதோ எண்டு அவன்ர விருப்பத்தின் படி செய்வம்.

**பரமேஸ்:-** அவன் விரும்பிறதைச் செய்யட்டும் (ரஞ்சி வேகமாக ஓடி வந்து)

**ரஞ்சி:-** அம்மா அப்பா அண்ணன் நஞ்சு குடிச்சிட்டான்.....

சோக இசை மேலெழும்
பறையொலி கேட்கும்.

**பின்நோக்குச் காட்சி**

**மாணவி:-** பள்ளிக்கூடத்துக்குப் போ எண்டு என்னைக் கட்டாயப்படுத்தினால் நான் சாவன் ..... நான் சாவன்

**பரமனா:-** என்ர இந்த நிலமைக்குக் காரணம் மைனா ரீச்சர்.

(பிரியா பூவுடன் வந்து சிரித்துக் கொண்டிருப்பாள்)

ஓ... இப்ப பூவோடை போவினம். பத்தாம் பன்னிரண்டாம் வகுப்பு வரேக்க, பொலிடோல் போத்திலோட போவினம்.

**ரவி:-** எழுபத்தாறு வயதைத் தாண்டினாலும் தங்கரத்தினம் ரீச்சர் இன்னும் நல்ல சுகமாக இருக்கிறா. நல்ல நாள் பெருநாள் எண்டால் அவவின்ர ஆசீர்வாதம் எனக்குப் பரிபூரணமாகக் கிடைக்கும்.

(ஏனைய மாணவர்கள் மேடையின் பின் பகுதியில் கூடுவர்)

**மாணவர்:-** நாங்கள் உங்களிடம் அன்பை எதிர்பார்க்கிறோம். நல்ல அரவணைப்பை எதிர்பார்க்கிறோம். உங்களையே கதியென்று அடைந்தோம்.

கல்விக் கோவிலில் குடியிருக்கும்
தெய்வங்கள் நீங்கள்.
அறிவு ஆற்றல் அனைத்தும் தந்திடும்
ஆதாரம் நீங்கள்.
இருளைப் போக்கி ஒளியைக் காட்டும்
சூரியர் நீங்கள்.
அருளைக் கொடுங்கள் அன்புக்கேங்கும்
மனதைத் தொடுங்கள் நீங்கள்.

– திரைமூடும் –

# விஞ்ஞான வகுப்பறைகளில் பல் உள ஆற்றல் கோட்பாட்டின் பிரயோகம்

**சி. திவாகரன்**
கல்வியியலாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மிக நீண்ட காலமாக கல்விப்புலம் சார்ந்தவர்கள் "நுண்ணறிவு" (Intelligence) என்பதனை மொழியியல் (Linguistic), தர்க்க ரீதியான கணிதம் (Logical - Mathematic) ஆகியவற்றில் கொண்டுள்ள ஆற்றலை வைத்தே அளவு கோடிட்டு வந்துள்ளனர்.

மேற்படி இரு விடயப்பரப்புக்களில் குறைவான தகைமைகளைக் காண்பிப்பவர்கள், அவர்கள் ஏனைய எவ்வகையான ஆற்றல்களைக் கொண்டிருப்பவர்களாயினும் சரி, அடைவு மட்டம் குறைந்தவர்களாக (Under achievers), கவன ஈர்ப்பு பற்றாக்குறைவான குறைபாடுள்ளவர்களாகவே (ADD - attention deficit disorder) கருதப்பட்டனர். இந்த நிலைமையில் பலரது கவனத்தை ஈர்த்து, நுண்மதி பற்றிய பரிமாணத்தில் பாரிய மாற்றம் ஏற்படக் காரணமாய் அமைந்த கோட்பாடே பல் உள ஆற்றல் கோட்பாடு (Multiple intelligence theory) ஆகும்

இக்கோட்பாட்டானது ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறைப் பேராசிரியராகவிருந்த திரு. ஹரவார்ட் காடினர் (Dr Haward Gardner) என்பவரால் 1983 இல் முன் மொழியப்பட்டதாகும்.

ஒரு மனிதனுடைய நுண்மதி சார்ந்த ஆற்றல்களின் அளவு கோலாக தனியே மொழிவளம், தர்க்கரீதியான கணிதம் ஆகியவற்றை மாத்திரம் கருத்தில் கொள்ளாது, அவனது பல்வேறு புலம் சார்ந்த ஆற்றல்களையும் கவனத்தில் எடுத்து பரந்த வீச்சினூடாக அளவிடலை மேற்கொள்ள வேண்டும் என்பதை காடினர். வலியுறுத்தினார். நுண்அறிவு விருத்திக்கு எட்டப்படவேண்டிய பரிமாணங்களை எட்டு அடிப்படை உள ஆற்றல் பிரிவுகளாக வகைப்படுத்தினார்.

அவையாவன. End states

1. மொழி தொடர்பான உள ஆற்றல் Poet
Linguistic intelligence (Word Smart) Journalist

2. தர்க்கம் சார்ந்த கணிதம் தொடர்பான உள ஆற்றல். Scientist
Logical - Mathematical intelligence Mathematician

3. வெளி இட வரைதல் Navigator
(Number / Reasoning Smart) Sculptor
சார்ந்த உள ஆற்றல்
Spatial intelligence (Picture smart)

4. உடல் – இயக்கவியல் சார்ந்த உள ஆற்றல் Dancer Athlete
Bodily - Kinesthetic intelligence (Body Smart)

5. இசையியல் சார்ந்த உள ஆற்றல் Composer
Musical intelligence (Music Smart) Violinist

6. ஆளிடைத் தொடர்புக்கான உள ஆற்றல்
Inter Personal intelligence (People Smart)

7. ஆள் அகத் தொடர்பிற்கான உள ஆற்றல் Therapist
Intra personal intelligence (Self Smart) Salesman

8. இயற்கையியலாளனுக்குரிய உள ஆற்றல் Person with detailed, accurate self-knowledge
Naturalist intelligence (Nature Smart)

Botanist
Farmer
Hunter

என்பனவாகும்.

இந்த எட்டு வகையான உள ஆற்றல் புலங்களினுடான சமாந்தர அபிவிருத்தியே ஒரு மனிதனுடைய சமநிலை மிக்க நுண்மதி ஆற்றலை மேம்படுத்தச் செய்யும்.

நுண்மதியினுள் பல் உள ஆற்றல்களை பன்மைப் படுத்தப்படாததாலேயே பல இளைஞர்கள் தாங்கள் செய்கின்ற வேலைகளில் உச்ச ஆற்றல் பயன்பாட்டை காண்பிக்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் இக்கோட்பாட்டின் நடைமுறைப்படுத்தலின் பின்னர் பிள்ளைகளிடையே ஒரு புதிய உத்வேகத்தையும் வாழ்க்கையை புதிய பாணியில் எதிர்கொள்ளுமன் ஆற்றலையும் காணமுடிந்தது.

பல் உள ஆற்றல் கோட்பாடு நடைமுறைக்கு வந்த பிற்பாடு வகுப்பறைக் கற்பித்தல் முறைகளிலும் பாரிய மாறுதல்கள் ஏற்பட்டன. ஆரம்ப கால விரவுரை ஆதிக்கம் பெற்ற சுண்ணக்கட்டியும், சொல்லாடலும் (Chalk & talk), பாடப் புத்தகங்களை ஒப்புவித்தல், வேலைப்பட்டியலை (Works Sheets) நிறைவேற்றல் போன்ற முறைகளையும் கைவிட்டு விருத்தி செய்யப்படவேண்டிய உள ஆற்றலுக்கு ஏற்ப புதிய கற்பித்தல் உத்திகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆரம்ப காலந்தொட்டே விஞ்ஞான பாடம் கற்பிக்கும் வகுப்பறைகளில் விரிவுரை முறைக்கற்பித்தலுக்கு மேலதிகமாக பரிசோதனைகளைச் செய்து காட்டுதல், அல்லது செய்முறைகளில் ஈடுபடுதல் போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அவை குறித்த ஒரு பாட அலகின் நோக்கத்தை நிறைவேற்றும் அடிப்படையிலேயே வடிவமைக்கப் பட்டிருந்தனவே அன்றி மாணவரின் இயலுமைக்கு ஏற்ப அவனது உளஆற்றல்களை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டிருக்கவில்லை.

ஆனால் தற்கால விஞ்ஞான வகுப்பறைகளில் பிரயோகிக்கும் கற்பித்தல் அணுகு முறைகளில் பல் உள ஆற்றலை விருத்தியாக்கக் கூடியதான பல்வேறு அம்சங்களைக் காணக்கூடியதாயுள்ளது.

மொழிவளம் சார்ந்த உள ஆற்றலை எடுத்துக் கொண்டால் விஞ்ஞான பாடத்தில் புதிய கலைச் சொற்களின் அறிமுகம், அவற்றிற்கான எண்ணக்கரு (Concept) உருவாக்கம். அவற்றின் பிரயோகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தர்க்கம் சார்ந்த கணிதம் சார்பான உள ஆற்றலை மேம்படுத்துவதில் கணித ரீதியில் நிறுவுவதன் மூலம் விதிகளை விளக்குதல் (விதி வருவிப்பு முறை) விதியை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் கணிதச் செய்கைகள், எண்ணறிவைப் பயன்படுத்தி தொழில் நுட்ப சாதனங்களின் உருவாக்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மூன்றாவதாக உள்ள இட வரைபு சார்ந்த உள ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு வானில் தோன்றும் உடுக்கோலங்கள் பற்றிய கற்கைகள், சூழலியலில் பயன்படுத்தப்படும் சம உயரக்கோட்டுப் படங்கள், இடவிளக்கப் படங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து உடல் இயக்கவியல் சார்ந்த உள ஆற்றல்களை மேம்படுத்த செயன்முறைக் கல்வியைக் குறிப்பிடலாம், பரிசோதனைகளில் மாணவரை ஈடுபடவிடுவதன் மூலம், அவர்களது உடல் இயக்கத்திறன்களை விருத்தியுறச் செய்ய முடியும்.

இசையியல் சார்ந்த உள ஆற்றல் விருத்தியை நோக்கின் ஒலி தொடர்பான சுரவரிசைகள் ஒலியை உருவாக்கும் வாத்தியங்கள், வாத்தியங்களின் இயக்கவிளக்கம், ஒலிப்பதிவு முறைகள் போன்றவற்றைக் கற்பிக்கும் போது இசையுடன் கூடிய உள ஆற்றலின் விருத்தியை ஏற்படுத்த முடியும்.

விஞ்ஞான வகுப்பறையில் பின்பற்றப்படும் பிரச்சனை தீர்க்கும் முறை, கலந்துரையாடல் முறை, குழு வேலை, களச்சுற்றுலா போன்ற முறையியல்களுக்கூடாக ஆளிடைத் தொடர்பிற்கான உள ஆற்றலை விருத்தி செய்ய முடியும்.

அவ்வாறே, கண்டறிமுறை, விஞ்ஞானமுறை, முயன்று தவறல்முறை, ஒப்படை, வேலைப்பட்டியல் போன்ற முறைகளில் ஆள் அகத்தொடர்பிற்கான உள ஆற்றல்களை மேம்படுத்த முடியும்.

விஞ்ஞானம் கற்பித்தலின் அடிப்படை நோக்கங்களில் ஒன்று இயற்கையோடு ஒன்றித்து வாழக் கற்பித்தலாகும். இயற்கை வளங்களின் பயன்பாடு சூழல் மாற்றங்கள், இயற்கைச் சமநிலை சூழல் மாசடைதல். இயற்கையின் அனர்த்தங்கள் போன்ற பகுதிகளினூடாக இயற்கை இயலாளனுக்குரிய உள ஆற்றல்களை மேம்படுத்த முடியும்.

விஞ்ஞான பாடமானது முற்று முழுதாகத் தேர்ச்சி மையமானது, ஆக்கத்திறன் விருத்தி, சிந்தனை விருத்தி போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டது. பிள்ளைகள் மகிழ்ச்சிடன் விரும்பிக் கற்கக் கூடியதான பல்வேறு கற்பித்தல் முறைகளை உள்ளடக்கியது. எனவே இப்பாடத்தினூடாக மாணவர்களது பல் உள ஆற்றல்களை விருத்தி செய்வது மிகமிக இலகுவானதாகும்.

ஆனால் இதனை அடைவதற்கு விஞ்ஞான ஆசிரியர் இயங்கியல் தன்மை உடையவராய் சிந்தனை வளம் மிக்கவராய், செயலூக்கம் மிக்கவராய் இருப்பது இன்றியமையாததாகும். ஆசிரியரது நன்கு திட்டமிடப்பட்ட கற்பித்தல் முறைகளுக்கூடாகவே மாணவர்களிடத்தில் பல் உள ஆற்றல் விருத்தி சாத்தியமாகும்.

எம் மத்தியில் காணப்படும் பல விஞ்ஞான ஆசிரியர்கள் வெறும் அறிவுக் களஞ்சியங்களாகவும் போதனை முறைக்காக பாடப் புத்தகங்களை எதிர்பார்த்திருப்பவர்களாகவும் காணப்படுவது துரதிஷ்டவசமாகும். அவர்கள் தங்களை பல்உள ஆற்றல் உள்ளவர்களாக மாற்றியமைப் பார்களேயானால் மாணவர்களிடத்தில் பல் உள ஆற்றலின் விருத்தி என்பது மிகச் சுலபமானதாகிவிடும்.

## உசாத்துணை நூல்கள்


Gardener, Howard, Multiple intelligence: The Theory in Practice New York Basic, 1993

Armstrong, Thomas, Multiple intelligence in the Classroom, Alexandria 1994

D. Marlow Edgier, D. Bhskara Rao Science Curriculum : Discovery Publishing House New Delhi - 1996

# மூளைவாதமும் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளும்

திரு. த. சிவகுமார்
விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## மூளைவாதம்

மூளை வாதம் ஒவ்வொரு குழந்தையையும் வித்தியாசமான முறையில் பாதிக்கின்றது. மூளையில் ஏற்படும் வாதத்தை மூளைவாதம் என்போம் இது ஒரு நோயல்ல மூளையில் ஏற்படும் ஊனம். இதற்கு முக்கிய காரணம் பிறப்பின் போது மூளைக்கு போதியளவு ஒட்சிசன் போகாமை ஆகும்.

லேசான பாதிப்புக்கு ஆளான குழந்தை லேசான நடை தடுமாற்றத்துடன் நடக்கும் சிலருக்கு கை கால்களின் இயக்கத்தில் குறை இருக்கும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவரால் நடக்க இயலாமல் போகலாம் அன்றாட வாழ்க்கையே பிறர் துணையின்றி இயலாது.

மூளை வாத நோய் எல்லா நாடுகளிலும் எல்லா வகையான குடும்பங்களிலும் காணப்படுகிறது பிறக்கும் 300 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு மூளை வாதம் ஏற்படும் அபயாம் உள்ளதாக மருத்துவர்களது ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## மூளை வாத நோயின் வகை

பாதிக்கப்பட்ட மூளைப் பகுதியின் அளவைப் பொறுத்து மூளைவாதக் குழந்தைகளின் உடலியக்கம் பாதிக்கப்படும் மூளை முடக்கு வாதத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. பாதிக்கப்பட்ட உடல் பகுதி
2. தசைத் துடிப்பு

## பாதிக்கப்பட்ட உடற்பகுதியில் ஏற்படும் குறைபாடுகள்

★ ஒற்றை வாதம்
ஒரு கையோ, காலோ பாவிக்கப்பட்டிருத்தல்

★ இரட்டை வாதம் / மேல்பக்க வாதம்
கைகளைக் காட்டிலும் அதிகமாகக் கால்களில் பாதிப்பு ஏற்படுவது.

★ மூன்றுறுப்பின் வாதம்
இரண்டு கைகளும் ஒரு காலும் அல்லது ஒரு கையும் இரண்டு காலும் பாதிக்கப்பட்டிருக்கும்.

★ மேல் கீழ்பக்க வாதம்
இரண்டு கைகளும் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டிருக்கும் முகத்தில் உள்ள தசைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் உணவு உண்பதிலும் பேசுவதிலும் சிரமம் இருக்கும்.

★ பக்க வாதம்
உடலின் ஒரு பகுதி முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கும்.

★ இரட்டைப் பக்க வாதம்
உடல் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தாலும் கைகள் கால்களை விட அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கும்.

## மூளைவாதம் குழந்தைகளை பாதிக்கும் முறைகள்

குழந்தையின் உடல் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் மூளையின் சிறுபகுதி பாதிக்கப்படுவதனால் மூளைமுடக்கு வாதம் ஏற்படுகிறது

இப்பாதிப்பினால் குழந்தையின் தசைகளோ, நரம்புகளோ நேரடியாக பாதிக்கப்படுவதில்லை மாறாக மூளையின் தசைக்கட்டுப்பாட்டுத் திறனைப் பாதிக்கின்றது பாதிப்பின் தன்மையைப் பொறுத்து மூளைவாதம் சுமாராகவோ தீவிரமாகவோ அமையும்.

## இப்பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு மூன்று வகைப்படும்

I. குழந்தை பிறக்கு முன்

II. பிரசவ காலத்தில்

III. பிறந்த உடனே

1. பிரசவத்திற்கு முன்பே பிரிந்து விடும் நச்சுக்கொடி
2. பிரசவத்திற்கு முன்பு ஏற்படும் இரத்தக் கசிவு
3. இரத்த ஓட்டத்தடைகள்
4. தீவிரப் பிராணவாயுக் குறைவு
5. 18 வயதிற்குக் குறைந்த தாய்க்கும் 35 வயதிற்கு அதிகமான தாய்க்கும் ஏற்படும் முதல் பிரசவம்
6. குறுகிய பிறப்பு வழி அமைந்திருத்தல்
7. குழந்தை குண்டாகவோ, தலை பெரிதாகவோ இருத்தல்
8. குழந்தையின் கழுத்தை நச்சுக்கொடி சுற்றி இறுக்குவதனால் வாயினால் சுவாசிக்க முடியாமை

9. குழந்தை பிறந்தவுடன் “பிறப்பு அழுகை” ஏற்படாமை

10. குழந்தை பிறக்கும் போது நீல நிறமாகவோ மஞ்சள் நிறமாகவோ இருத்தல்

## மூளை முடக்கு வாதத்தின் அறிகுறிகள்

1. பிறந்து மூன்று மாதம் வரை சிரிக்காமல் இருக்கும்.

2. பிறந்து மூன்று மாதத்திற்குப் பிறகு தலை நிற்காமல் இருக்கலாம்

3. குழந்தை உறிஞ்சும் போதும் விழுங்கும் போது கடினப்படல்

4. கை, கால்கள் இறுகிக் காணப்படும்

5. முதுகுப்புறம் வில்லைப் போல் வளைந்து காணப்படும்

6. தசையின் அழுத்தம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருத்தல்

7. எட்டு மாதம் வரை உதவியின்றி உட்காராமல் இருத்தல்

8. உடம்பின் ஒரு பக்கத்தில் உள்ள உறுப்புகள் மட்டும் இயங்கும்

9. உணவு உட்கொள்ளும் போது மூச்சுத்திணறல், தொண்டை அடைப்பு ஏற்படல்.

## மூளை வாதத்தின் வெளிப்பாடுகள்

1. குழந்தையின் அசைவுகளும் வளர்ச்சி வளர்ச்சியும் வித்தியாசமாகக் காணப்படும்

2. மூளை முடக்கு வாதம் ஒரு நோயல்ல இது ஒரு மருத்துவநிலை

3. மூளை முடக்கு வாதம் என்பது மூளைக்கு ஏற்பட்ட ஒரு பாதிப்பு ஆகும் இது பரம்பரையாக வருவதில்லை.

4. இது ஒரு வியாதி இல்லை ஆதலால் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவாது.

5. இந்நோய் நிலையை குணப்படுத்த முடியாது இதனோடு இணைந்த வலிப்பு, மூச்சுத்திணறல் மனநிலை பாதிப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மருந்து உண்டு.

6. இந்நோய் பாதிப்புக்கு உள்ளானவர்களை பைத்தியம் எனக்கூறமுடியாது

7. மூளைவாதம் குழந்தையின் ஆயுள் காலத்தை குறைப்பதில்லை மற்றைய பாதிப்புக்களில் இருந்து கவனிக்கப்படுமிடத்து சாதாரண மனிதனை ஒத்த ஆயுள் காலம் கொண்டதாகக் காணப்படும்.

8. மூளை முடக்குவாதம் நாளுக்கு நாள் அதிகரிப்பதில்லை.

9. குழந்தையின் வாயில் இருந்து எச்சில் ஒழுகலாம்

10. மூளை முடக்கு வாதமுடைய பிள்ளைக்கு பிறந்ததிலிருந்து இயல்பியல் பயிற்சி வழங்கலாம்.

11. எல்லா மூளை முடக்கு வாதம் உள்ள குழந்தைகளுக்கும் மற்றவர்களைப் போல உணர்ச்சி உண்டு

12. மூளை வாதமுடைய பிள்ளை கண்பார்வை காதுகேளாமை, வலிப்பு, மூச்சுத்திணறல், பேச்சுத்தடுமாற்றம் அல்லது பேச்சு இயலாமை போன்ற பாதிப்புக்களுக்கு உள்ளாகலாம்.

## மூளை முடக்கு வாதம் வருவதற்கான காரணங்கள்

- மூளை வளர்ச்சியில் தடை
  - மாறுபட்ட அணுக்கள்
  - மாறுபட்ட க்ரோமோசோமுகள்
  - மூளைக்கு செல்லும் இரத்த ஓட்டத்தில் மாறுபாடு
- வளரும் மூளையில் ஒரு பகுதி பாதிக்கப்படுதல்
  - குழந்தை பிறக்கும் முன்பு
  - குழந்தை பிறக்கும் போது
  - குழந்தை பிறந்த உடன்

### குழந்தை பிறக்கும் முன்பு

- தாய்க்கு கர்ப்பகாலத்தில் நீரிழிவு, தைராயிடு கோளாறு, அதிக இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்றவை தாக்குதல் சத்துக் குறைவு
- தாய் கர்ப்ப காலத்தில் மது, புகை, போதை மருந்து உட்கொள்ளுதல்
- தாய்க்கு வலிப்பு வருதல்
- தாயை கதிர் வீச்சு தாக்குதல்
- Rh பொருத்தம் இன்மை (இரத்தத்தில்)
- உடலில் அல்லது மனதில் அதிர்ச்சி

### குழந்தை பிறக்கும் போது

- குறை பிரசவம் நீடித்த பிரசவ நேரம்
- பிரசவ நேரத்தில் குழந்தைக்கு நாடி துடிப்பு குறைவது
- குழந்தை நிலை மாறி பிறத்தல் (கால் அல்லது இடுப்பு முதலில் வெளி வருதல்)
- குழந்தை கழுத்தில் கொடி சுற்றி பிறப்பதால் குழந்தைக்கு ஏற்படும் மூச்சுத் திணறல்
- பிறந்த உடன் அழாமல் இருத்தல்
- எடை மூன்று கிலோவிற்கு குறைவாக இருத்தல்
- மருத்துவ ஆயுதங்களால் தலையில் காயம் ஏற்படுதல்

### குழந்தை பிறந்த உடன்

- பிறந்தவுடன் மூச்சு திணறல்
- மூளையின் உள்ளே இரத்த கசிவு
- மூளையில் கட்டி
- மூளையில் நீர் தேக்கம்
- பிறந்தவுடன் ஏற்படும் வலிப்பு
- குழந்தைக்கு சத்துக் குறைவு
- பிறந்தவுடன் மஞ்சள் காமாலை தாக்குதல்
- உடலில் அதிர்ச்சி
- மூளைக் காய்ச்சல்

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள்
இலங்கை முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை
நல்ல பாதையில் சேர்க்கும் பணி எமதே

முத்து முத்தான

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சு பாலகனாம்
அவன் தன்னம் தனிமையை போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்

முத்து முத்தான


எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம்
உள்ளத் தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம்
அவன் ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலை தூண்டிடுவோம்

முத்து முத்தான

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே
நல்ல கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில்
தினம் பெற்ற கடமையை பேணி ஏற்றே
ஞாலம் போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்

முத்து முத்தான

இயற்றியவர்
பொன் ஸ்ரீ வாமதேவன்



Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely